வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 07.09.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 276 | பக்கங்கள் : 16

# அவசரகால சட்டம் 81 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

## முக்கிய தலைவர்கள் விவாதத்தில் பங்கேற்கவில்லை

கொழும்பு, செப். 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் 81 மேலதிக வாக்குகளினால் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. அவசரகால சட்டத்துக்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 51 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 81 மேலதிக வாக்குகளினால் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 15

## கொரோனா தொற்றால் மேலும் 180 பேர் மரணம்

கொழும்பு, செப். 07

நாட்டில் மேலும்180 பேர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள 15

## அவசரகால சட்ட விதிமுறைகள் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்

### அரசின் சகல நடவடிக்கைகளையும் தோற்கடிப்போம் என சஜித் சூளுரை



கொழும்பு, செப். 07

“ஐக்கிய மக்கள் சக்தி, அவசரகால விதிமுறைகளைக் கடுமையாக எதிர்க்கின்றது. மக்களின் ஜனநாயகத்தின் மீது இத்தகைய தாக்குதலை மேற்கொள்ள அரசு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் தோற்கடிப்போம்” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் நேற்று வெளி 15

## இன்னோர் ஆவணத்தை அனுப்புவது கூட்டமைப்பு பிரிவதாக தென்படலாம்

### சம்பந்தன் ஒப்பத்துடன் ஜெனிவாவுக்கு கடிதம்



யாழ்ப்பாணம், செப். 07

ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இரு ஆவணங்களை அனுப்புவது பிரிந்து செல்வதாகத் தென்படலாம். இதனால், இரா. சம்பந்தனின் கையொப்பத்துடன் மட் 15

## யாழில் கணவன் - மனைவி கொரோனாவால் மரணம்

யாழ்ப்பாணம், செப். 07

யாழ்ப்பாணத்தில் கணவன், மனைவி கொரோனோ வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

சாவகச்சேரி, நுணாவில் பகுதியை சேர்ந்த தம்பதியரே கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். 15

## நேற்று 3,173 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 07

நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 173 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகா 15

## உரிமைகளை அடக்கும் விடயங்கள் அவசரகால சட்டத்தில் இல்லை

### நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, செப். 07

நாட்டின் மொத்த உள்நாட்டு தேவையில் 18 வீதம் தான் இங்கு உற்பத்தியாகிறது. 82 வீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதனை வியாபாரிகள் பயன்படுத்தி மக்களை சூறையாடுகின்றனர். இதனை கட்டுப்படுத்தவே ஜனாதிபதி அவசர 15

## யாழ்ப்பாணத்தில் நேற்று 288 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், செப். 07

யாழ். மாவட்ட செயலகத்தால் நேற்று மாலை வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 213 பேருக்கும், நேற்றிரவு வெளியான யாழ். போதனா மருத்துவமனை ஆய்வக பி. சி.ஆர். அறிக்கையின் பிரகாரம் 75 பேருக்குமாக 288 பேருக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்று 15

### ஜெனிவா கூட்ட தொடர்;

## இணைய வழியில் கலந்துகொண்டு அமைச்சர் பீரிஸ் உரையாற்றுவார்!

கொழும்பு, செப். 07

ஜெனிவாவில் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இணைய வழியாகக் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

“இதன்போது, கோவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் எமது நாட்டின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட அபிவிருத்திகள் பற்றிய யதார்த்தமான கருத் 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு ஒரு சில நாட்களே இருந்த நிலையில் நமது சமூக விஞ்ஞானிகள் சிலர் தமிழ் அரசியல் தலைமைகள் எத்தகைய முடிவை எடுக்க வேண்டும் என்று யோசனை சொன்னார்கள்.

தமிழ் தரப்பிலிருந்து ஒரு வேட்பாளரை நியமிக்க வேண்டும் என்று புறப்பட்டவர்கள் ஒருசில நாட்களில் ஒரு முடிவெடுக்க முடியாமல் தமது முயற்சியைக் கைவிட்டிருந்தனர். தேர்தல் அறிவிக்கப்பட்ட மறுநாளே அவர்கள் தமது முயற்சியைத் தொடங்கியிருந்தால் சிலவேளை அவர்களின் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கலாம்.

நமது புத்திஜீவிகளே இப்படியென்றால், அரசியல் தலைவர்களை குறை கூறிப் பயனில்லைத்தானே.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு ஒரு வாரமே இருக்கும் நிலையில், நமது அரசியல் கட்சிகள் போட்டிபோட்டுக்கொண்டு தத்தமது யோசனைகளை மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர், ரெலோவின் ஏற்பாட்டில் நடந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் (தமிழ் தேசிய மக்கள் முன்னனி இல்லை) இணையவழி ஒன்றுகூடலில், கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள மூன்று கட்சிகளும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள மூன்று கட்சிகளும் (கவனிக்கவும் அதிலும் அனந்தியை காணவில்லை) சேர்ந்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இன்றைய சவால்களை ஒன்றாக எதிர்கொள்வதென்று முடிவெடுத்திருந்தன. அப்படித்தான் கூட்ட ஏற்பாட்டாளர்களான ரெலோவால் ஊடகங்களுக்கு சொல்லப்பட்டது.

ஜெனிவாவுக்கு இந்த கட்சிகள் அனைத்தும் இணைந்து அறிக்கையிடுவதென்று அப்போது முடிவு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசுக் கட்சியும் சேர்ந்தே இந்த முடிவை எடுத்ததாகவே சொல்லப்பட்டது.

ஆனால், இப்போது தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்து மற்றைய கட்சிகள் ஒன்றாகவும் தமிழ் அரசு தனித்தும் கடிதங்களை அனுப்பியிருக்கின்றன. அதிலும் தமிழ் அரசு அனுப்பிய கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்திட்டிருக்கிறார் எனவும், மற்றைய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் சிறிதரன், அந்தக் கடிதத்தில் உள்ள வாக்கியங்கள் சிலவற்றோடு உடன்பட மறுத்திருக்கிறார் எனவும் அவர் தனித்து ஒரு கடிதத்தை அனுப்பப்போகிறார் என்றும் செய்திகள் வருகின்றன.

அவைபற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

ஆனால், விசயம், வேறுஒன்றுமல்ல, ஆணையாளர் அம்மையார், மாநாடு ஆரம்பமாவதற்கு முதல் நாளே தான் வாசிக்கவிருக்கும் அறிக்கையைத் தயாரிக்கப்போகிறார் என்பதை நமது தலைவர்கள் அறிந்து வைத்திருப்பது நமது பாக்கியம்தான்.

அடிக்கடி அங்கு சென்று வருவதானாலோ என்னவோ அவர்களுக்கு அந்த விடயங்கள் எல்லாம் அத்துபடியாகத்தானே இருக்கும்.

அவருக்கு ஏற்கனவே இலங்கை விவகாரங்கள் விடயத்தில் ஆலோசனை சொல்வதற்கு பலர் இருக்கிறார்கள். அதுமாத்திரமன்றி, கடந்த கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி இலங்கை விவகாரங்களைக் கையாள தனியான அலுவலர்களே நியமிக்கப்பட்டு தமது பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களின் தரவுகளை வைத்துக்கொண்டு அம்மையார் தனது அறிக்கையை தயாரித்திருப்பார் என்பதில் விசயத்தை தெரிந்தவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள்.

ஆனால், நமது கட்சிக்காரரர்கள் இப்போது எழுதுகின்ற விடயங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அறிக்கையிலும் இடம்பெற்றிருக்கலாம். அப்படி இடம் பெற்றுவிட்டால் நமது தலைவர்கள் அதற்கு உரிமை கோர காத்திருக்கிறார்கள்.

தமிழர் தலையெழுத்துத்தான் எப்போதோ எழுதி முடிக்கப்பட்டுவிட்ட ஒன்றுதானே.!

**- ஊர்க்குருவி**

# உலகவங்கி, நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சு நடத்துகின்றது

## இராஜாங்க அமைச்சர் சேமசிங்க



கொழும்பு, செப். 07

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பொருளாதார பாதிப்புக்களை சீர்செய்வதற்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்களுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி செலுத்தும் பணிகள் விரைவில் நிறைவுபெறும். இதன் பின்னர் நாடு வழமை நிலைக்கு திரும்பும் என சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி மற்றும் சுய தொழில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தால் பொருளாதார மட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், அத்தியாவசிய பொருள் இறக்குமதி மற்றும் சேவை விநியோகத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனை அரசாங்கத்தின் தவறான முகாமைத்தும் எனக் கருத முடியாது.

கோவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய நாட்டை வழமைக்குக் கொண்டு வருவற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும்.

எதிர்க்கட்சியினர் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்கான அனைத்து செயல்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். பல்வேறு விடயங்களை குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சியினர் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் கடந்த மாதம் வரை சுமார் 147 போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்தார்கள்.

இதன்போது சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

தொடர்ச்சியான போராட்டங்களும் கோவிட் வைரஸ் தொற்று பரவல் தீவிரமடைவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. தற்போதைய தேசிய அனர்த்த நிலையை கருத்தில் கொண்டு எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் செயல்பட வேண்டும். கோவிட் தாக்கத்தை கருத்தில் கொண்டு நாடு தழுவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பு என்பதால் அரச ஊழியர்களது மாத சம்பளம் குறைக்கப்படவில்லை. அத்துடன் அரசினால் வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுகளும் இடைநிறுத்தப்படவில்லை. அனைத்து கொடுப்பனவுகளும் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (ஐ)

# உடுவிலில் 42 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், செப். 07

உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று 42 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதில் பெரும்பாலானவர்கள் இளவயதினராவர்.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வகத்துக்கு நேற்று உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 71 பேரின் மாதிரிகள் பி. சி.ஆர். சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

இதிலேயே 42 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதில், 16 பேர் 18 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். (ஐ)

### கல்வி TV CHANNEL-1

**07.09.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி TV CHANNEL - 2

**07.09.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
07.09.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆவணி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## கூட்டமைப்புக்குள் உடைவா?

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட இரண்டு கடிதங்கள் தொடர்பில் நேற்றை தலையங்கத்தில் விவாதித்திருந்தோம். இந்த கடிதங்களை அடிப்படையாகக்கொண்டு, கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் தனியான ஓர் அணியாக செயல்படப் போகின்றனர் எனவும் செய்திகள் வெளிவருகின்றன. இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், ரெலோவும் புளொட்டும் அவரப்பட்டுவிட்டன என்று தெரிவித்திருக்கின்றார். இதுதொடர்பான விடயங்களை ஆராயும் நோக்கில், ஈழநாடு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, விடயங்களை கேட்டறிந்தது. அவர்களின் கருத்தின்படி, ஏற்கனவே அனைத்து கட்சிகளும் கலந்துரையாடி இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கு அமைவாக, தமிழ் அரசு கட்சி செயல்படவில்லை. இதன் காரணமாகவே இவ்வாறானதொரு குழப்ப நிலை ஏற்பட்டதாக அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

ஏனெனில், பொதுவான விடயங்களில் எவ்வாறு அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் இணைந்து செயல்படுவது என்னும் அடிப்படையில், ஏற்கனவே சில சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த சந்திப்புக்களில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கலந்துகொண்டிருந்தார். இணைந்து செயல்படுவதற்கு இணக்கமும் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே அனைவருமாக இணைந்து ஒரு கடிதத்தை மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், மாவையின் விருப்பத்திற்கு சம்பந்தன் இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. இந்த விடயம் இறுதியிலேயே ஏனையவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த நிலையிலேயே இவ்வாறான குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இதனைக்கொண்டு கூட்டமைப்பு உடைந்துவிட்டது என்னும் முடிவுக்கு வரமுடியுமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள், இவ்வாறு தனியாக செயல்படுவதும், அறிக்கைகளை வெளியிடுவதும் புதிய விடயமல்ல. தமிழ் அரசியல் சூழலை பொறுத்தவரையில், இது அவ்வப்போது தோன்றி மறையும் மின்மினிப் பூச்சிகள்போன்ற ஒன்று. இவ்வாறான விடயங்களால் எல்லாம் கூட்டமைப்பு உடைந்துவிட முடியுமென்றால், அது எப்போதோ உடைந்திருக்க வேண்டுமல்லவா! இன்று, தனியான கடிதமொன்றில் கையெழுத்திட்டிருக்கும் புளொட்டும் ரெலோவும், தேர்தல் என்றவுடன் 'வீடு' சின்னத்தில்தான் போட்டியிடும்.

அவர்கள் 'வீடு' சின்னத்தில் போட்டியிடும் வரையில், கூட்டமைப்பிற்கு எதுவும் நடந்துவிடாது. இது, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் தெரியும். முக்கியமாக, சம்பந்தன் தனது காலத்தில் அவ்வாறானதோர் உடைவுக்கு இடமளிக்கப்போவதில்லை. ஏற்கனவே, சம்பந்தன் அதனை தெளிவாக கூறிவிட்டார். கடிதங்களை அனுப்புவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதனை அனுப்பலாம். அதேபோன்று, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் தங்களுக்கிடையில் எந்தவொரு பிளவும் இல்லையென்று கூறிவிட்டனர். பிளவு இல்லையெனின், பின்னர் எதற்கான தனித்தனியாக கடிதங்கள் அனுப்பப்படுகின்றன? கட்சிகளுக்குள் பிளவுகள் காணப்படுவதற்கும் கூட்டமைப்பு உடைவதற்கும் ஒரு விதமான தொடர்பும் இல்லை. கட்சிகள் மத்தியில் முரண்பாடுகள் இருக்கின்றன என்பது உண்மைதான்.

சம்பந்தனுக்கு பின்னர் நிலைமைகள் எவ்வாறு நகரும் என்பது தொடர்பில் இப்போதைக்கு ஆரூடங்களை கூறமுடியாது. ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சி, தாங்கள் தனியாக செல்லப் போகின்றோம், நீங்கள் உங்கள் வழியில் செல்லுங்கள் - என்று கூறும் வரையில், கூட்டமைப்பு ஒருபோதுமே உடைவுறப் போவதில்லை. நிச்சயமாக, சம்பந்தன் காலத்தில் தமிழ் அரசு கட்சி அவ்வாறானதொரு முடிவை எடுக்க வாய்ப்பில்லை. பிற்காலத்தில் எதுவும் நடக்கலாம். அப்போதும்கூட, தமிழ் அரசு கட்சியாக ஒரு முடிவை எடுக்காத வரையில், பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பைவிட்டு வெளியேறப்போவதில்லை. எனவே, கூட்டமைப்பு உடையுமா? என்று கேட்டால், அதற்கான பதில் - உடையும் ஆனால் உடையாது.

# தமிழ் அரசியல் தரப்பை நாடிபிடித்தறிந்துள்ள பீரிஸ்!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரில் பலப்படுத்துமளவுக்கு இருக்கும் நிலையில் வடக்கு - கிழக்கு அரசியல் தரப்பு தன்னை தற்போது ஒரு பலவீனமான நிலையில் வைத்துள்ளது.

இரு தினங்களுக்கு முன்னர் ஜெனிவா கூட்டத்தொடருக்கு அனுப்பி வைப்பதற்கான அறிக்கை தொடர்பாக ஒரு பொது நிலைப்பாட்டை எட்ட முடியாது, தமிழ் அரசியல் தரப்பு குழம்பிப் போயிருக்கின்றது. இந்தக் குழப்பநிலையை அவதானிக்கும்போது, வடக்கு - கிழக்கில் தீர்வு காணப்படவேண்டிய மனிதாபிமானப் பிரச்சனைகள் மற்றும் அரசியல் விடயங்கள் என்பவற்றை தமது சொந்த அரசியல் நலன்களைப்பேணும் விதத்தில் தமிழ் அரசியல் தரப்பினர் வரிந்து கட்டி மோதிக்கொண்டிருக்கின்றமையையே அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், இலங்கை மீதான ஜெனிவா தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று 13 பக்க அறிக்கையை தயாரித்து, கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பிரதிநிதி ஊடாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

**இணையவழி பேரவை கூட்டம்**

கடந்த காலங்களில்போலன்றி இந்தத் தடவை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் இணையவழி மூலமாகவே இடம்பெறவுள்ளது. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் இலங்கை தொடர்பான தமது வாய்மூல அறிக்கையை எதிர்வரும் 13ஆம் திகதி சமர்ப்பிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது முற்கூட்டியே தெரிந்த நிலையில், பேராசிரியர் பீரிஸ் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக 13 பக்க அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளார். எனவே, இலங்கை அரசாங்கம் முன்கூட்டியே ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பாக தன்னை தயார் செய்துள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பு ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்க கூட்டாக ஓர் அறிக்கையை தயாரிக்க முடியாதிருப்பது நகைப்புக்குரியதாகவே இருக்கின்றது. அமைச்சர் பீரிஸை பொறுத்த வரை தமிழ் அரசியல் தரப்பின் அரசியல் நடவடிக்கை மற்றும் பேச்சுகள் தொடர்பில் நல்ல அனுபவஸ்தராகவே இருக்கின்றார்.

**நோர்வேயின் சமரச முயற்சி அனுபவம்**

நோர்வேயின் அனுசரணையோடு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டபோது அரச தரப்பின் முதன்மைப் பேச்சாளராக ஜீ. எல். பீரிஸ் விளங்கியிருந்தார். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் முதன்மைப் பிரதிநிதிகளான அரசியல் துறைத் தலைவர் சு. ப. தமிழ்செல்வன் மற்றும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடனும் பல சுற்றுப் பேச்சுக்களில் பங்கு பற்றியிருந்தார்.


இந்த நிலையில், ஜெனிவாவில் இருதரப்பும் அணுகப்போகின்ற விடயங்கள் தொடர்பாக அமைச்சர் பீரிஸ் நன்கு அறிந்து வைத்திருந்த நிலையில், அரச தரப்பும் வெளிவிவகார அமைச்சர் என்ற தகுதிக்கு அப்பால், ஜெனிவா விவகாரத்தை கையாள அவருக்கு முழு அதிகாரத்தையும் வழங்கியுள்ளது.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது அரசியல் தீர்வு சம்பந்தமாகவே பெரிதும் பேசப்பட்டது. ஆனால், தற்போது 2009ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில், மனிதாபிமான பிரச்சனைகளே முனைப்படைந்த நிலையில், அப்பிரச்சனைகளை தீர்ப்பதோடு, அரசியல் ரீதியாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இதுவிடயத்தில் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை பெரிதும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் தரப்பினர் ஜெனிவாவில் இத்தடவை சமர்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கருத்து வேறுபாடுகளுக்கு இடம்தராது, பொது நிலைப்பாட்டை எடுக்கத் தவறியுள்ளனர். இதன் மூலம் தமது ஒற்றுமையின்மையை சர்வதேச சமூகத்துக்கு தமிழ் அரசியல் தரப்பு கோடிட்டுக்காட்டியுள்ள நிலையிலேயே, ஜீ. எல். பீரிஸ் அரச தரப்பு நிலைப்பாட்டை பதின்மூன்று பக்க அறிக்கையாக முன்வைத்துள்ளார்.

எனவே, தமிழ் தரப்பின் அரசியல் விடயங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளோடும்கூட சர்வதேச மட்டத்தில் பல சுற்றுப் பேச்சுக்களில் பங்குபற்றிய அனுபவஸ்தராக வெளியுறவு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் விளங்குகிறார். இந்த பின்னணியில், தற்சமயம் அவர் சர்வதேச சமூகத்துக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையை மறுதலிக்கும் விதத்தில், தமிழ் தரப்பு எவ்வளவு தூரம் தன்னை தயாராக வைத்துள்ளதென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நல்ல செய்தி தேடி வரும். பொறுமை கூடுவதால் சாதிப்பீர்கள். மற்றவர்களிடம் பணிவாகப் பேசி நன்மை பெறுவீர்கள். முன்னேற்றத்திற்கு எடுத்த முயற்சி ஓரளவுதான் வெற்றி பெறும்.

**இடபம்**
புதிய விஷயம் ஒன்றை கற்று அதைச் செயல்படுத்துவீர்கள். பணவரவு தாமதமாகிப் பிறகு கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முந்தைய கவலைகளில் இருந்து விடுபட்டு நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்**
மற்றவர்களின் பாராட்டால் மகிழ்ச்சி உண்டாகும். கொடுத்த பொருள் பத்திரமாகத் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் ஒருவருக்கு உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு சரியாகும்.

**கடகம்**
எதிலும் கவனமாகச் செயல்பட வேண்டிய நாள். நன்றி மறந்த சொந்த பந்தங்களை நினைத்து வருந்தாதீர்கள். ஆடம்பர செலவுகளால் சிறிதளவு பண நெருக்கடி உண்டாகும்.

**சிம்மம்**
புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். அலுவலகத்தில் வளைந்து கொடுத்து சென்று வெல்வீர்கள். குழந்தைகளின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுவீகள்.

**கன்னி**
சுபநிகழ்ச்சி நிறைவேறுவதில் சற்று மந்தநிலை ஏற்படும். சமீபமாக ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலை மாறி நிம்மதி வரும். ஒருசிலருக்கு இடமாற்றம் மகிழ்ச்சியையும், லாபத்தையும் தரும்.

**துலாம்**
திட்டமிட்ட விஷயம் திசை மாறிச்சென்றாலும் நல்ல பலன் உண்டு. கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வெல்வீர்கள். பணியிட எதிரிகள் மனம் மாறி நண்பர்களாவர்.

**விருட்சிகம்**
எதிர்கால வாழ்வுக்கு உதவும் திட்டம் ஒன்று நிறைவேறும். செய்ய நினைத்த செயல் ஒன்றை நல்லபடியாக முடிப்பீர்கள். நேற்றைய பிரச்னை ஒன்று இன்று நல்ல முடிவிற்கு வரும்.

**தனுசு**
குழந்தைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் இருக்கும். தள்ளிப்போட்ட வேலைகளை விரைந்து முடிக்க முயலுங்கள். உங்களின் திட்டத்திற்குப் பணியிடத்தில் வரவேற்பு அதிகரிக்கும்.

**மகரம்**
வெற்றி வாய்ப்புக் கூடும். குடும்பத்தினருடன் அனுசரித்து செல்லவும். கடன்களை முடிப்பதில் சுணக்கம் வேண்டாம். பேச்சிலும் செயலிலும் மிகுந்த கவனம் தேவை.

**கும்பம்**
நண்பர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படும். பெரியோருக்கு உதவி செய்து அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். உணவு விஷயத்தில் கட்டுப்பாடாக இருக்க வேண்டும்.

**மீனம்**
மகிழ்ச்சி தரும் செலவு என்றாலும் கட்டுப்படுத்தப் பாருங்கள். தன்னம்பிக்கை இழக்க செய்பவரிடமிருந்து விலகுங்கள். உங்களின் பணிக்கு பாராட்டு கிடைக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

# பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க. கூட்டணி கறுப்புக்கொடி போராட்டத்துக்கு அழைப்பு



சென்னை, செப் 07

பா.ஜ.க. அரசின் மக்கள் - ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து எதிர்வரும் 20 ஆம் திகதி தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சியினர் தங்கள் இல்லம் முன்பு கறுப்புக்கொடி ஏந்திப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் டீசல் மற்றும் சிலிண்டர் மீதான விலை உயர்வு, பெகாசஸ் விவகாரம், மூன்று வேளாண் சட்டங்கள் என ஒன்றிய அரசுக்கு எதிராக நாடு முழுவதிலிருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. குறிப்பாக காங்கிரஸ் கட்சி, அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒன்றிய அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகிறது. இதற்காகக் கடந்த ஒகஸ்ட் 20ஆம் திகதி காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிலையில், ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் போராட்டம் நடத்தவுள்ளன.

இதுகுறித்து திமுக தலைவர் ஸ்டாலின், திராவிடர் கழகம் தலைவர் கி.வீரமணி, தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, விசிக தலைவர் திருமாவளவன், கே.பாலகிருஷ்ணன், முத்தரசன், காதர்மொகிதீன், ஜவாஹிருல்லா, ஈ.ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் வெளியிட்ட அறிவிப்பில், “காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் இந்திய அளவிலான எதிர்க்கட்சி தலைவர்கள் பங்கேற்ற காணொலிக் கூட்டத்தில் பாஜக அரசின் மக்கள் விரோத ஜனநாயக - விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து நாடு முழுவதும் செப்டம்பர் 20 முதல் 30ஆம் திகதி வரை பல்வேறு போராட்டங்களை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, பா.ஜ.க. அரசின் செயல்களைக் கண்டித்து தி.மு.க.தலைமையிலான அனைத்து கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் மாநிலம் முழுவதும் வரும் 20ஆம் தேதி காலை 10 மணிக்கு தங்களின் இல்லம் முன்பு கறுப்புக்கொடி ஏந்தி கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிட வேண்டும் . ஒருங்கிணைந்து போராடுவோம், மதச்சார்பற்ற - ஜனநாயக இந்தியக் குடியரசைப் பாதுகாப்போம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளாட்சி தேர்தலில் எல்லா இடங்களிலும் அதிக வாக்குகளை பெற்று முன்னேறுவோம்

## நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவிப்பு



சென்னை, செப். 07

”உள்ளாட்சி தேர்தலில் எல்லா இடங்களிலும் போட்டியிடும் திட்டம் உறுதியாக உள்ளது. கடந்த முறை மக்கள் 12 சதவீதம் வாக்களித்தார்கள். இந்த முறை அதிக வாக்குகள் பெற்று முன்னேறி போவோம்” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவிக்கையில், ”தமிழர் திராவிடர் இல்லாத அரசியல் இல்லை என்கிறார்கள். திராவிடரால் எங்களுக்கு ஒரு அரசியலும் இல்லை. தமிழர் இல்லாமல் இங்கு எவருக்கும் அரசியல் இல்லை. உள்ளாட்சி தேர்தலில் எல்லா இடங்களிலும் போட்டியிடும் திட்டம் உறுதியாக உள்ளது. கடந்த முறை மக்கள்12 சதவீதம் வாக்களித்தார்கள். இந்த முறை அதிக வாக்குகள் பெற்று முன்னேறி போவோம். தி.மு.க. தற்போதுதான் முதல் முதலாக ஆட்சிக்கு வருவது போல் தமிழ் படித்தவர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமை என்று கூறுகிறார்கள். இத்தனை ஆண்டுகள் என்ன செய்தீர்கள்?.

ரூ.100 கோடியில் பெரியாருக்கு சிலை வைப்பதற்கும், பிரதமர் சர்தார் வல்லபாய் படேலுக்கு சிலை வைத்ததற்கும் என்ன மாறுபாடு உள்ளது?. 100 நாள் வேலை திட்டத்தில் தூர்வாரிய ஏரிகள் எத்தனை?, எவ்வளவு மரங்கள் நட்டுள்ளனர்?. சாலைகள் எவ்வளவு அமைத்தார்கள்?. 100 நாட்களுக்கு பதிலாக தற்போது 150 நாட்களாக மாற்றி வேளாண்மையை விட்டு பொது மக்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது” என்று அவர் கூறினார்.

# வெளிநாடு வாழ் தமிழர் பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## மாநிலங்களவை எம்.பி அப்துல்லா உறுதி



சென்னை, செப் 07

”வெளிநாடு வாழ் தமிழர்களுக்காகத் தனித் துறையை உருவாக்குவோம் என்று திமுக தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது. வெளிநாடு வாழ் தமிழர்களுக்குப் பல்வேறு பிரச்னைகள் உள்ளது. அதை ஒன்றிய அரசு மூலமாகத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்” என மாநிலங்களவை எம்.பி. யாகத் தெரிவாகியுள்ள அப்துல்லா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை எம்.பி-யாக திமுகவைச் சேர்ந்த எம்.எம். அப்துல்லா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். எம்.பி ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகத்திற்கு வந்தார் எம்.எம்.அப்துல்லா. அங்கு மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, கட்சி அலுவலகத்தில் தி.மு.க. நிர்வாகிகளைச் சந்தித்து அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றார்.

அதன்பின்பு செய்தியாளர்களிடம் பேசிய எம்.பி அப்துல்லா, “திமுக, இயக்கத்தில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை ஒருபோதும் கைவிடாது என்பது தான் எனக்குக் கிடைத்திருக்கும் எம்பி பதவி. நாடாளு மன்றத்தில் எந்த விஷயத்தைக் கையில் எடுக்க வேண்டும், எப்படிச் செயலாற்ற வேண்டும் என்று கட்சித் தலைமை உத்தரவிடு கிறதோ, அதுவே என்னுடைய குரலாகப் நாடாளுமன்றத்தில் எதிரொலிக்கும்.

வெளிநாடு வாழ் தமிழர்களுக்காகத் தனித் துறையை உருவாக்கு வோம் என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது. அதற்கேற்ப நாடாளுமன்றத்தில் என்னுடைய குரல் இருக்கும். வெளிநாடு வாழ் தமிழர்களுக்குப் பல்வேறு பிரச்னைகள் உள்ளது. அதை ஒன்றிய அரசு மூலமாகத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுப்பேன்.” எனத் தெரிவித்தார்.

# தமிழர்களிடம் காணிகள் அபகரிப்பு; சிங்களவருக்காக காடுகள் அழிப்பு!

## இதுதான் ஒருநாடு; ஒரு சட்டமா என சார்ள்ஸ் கேள்வி

கொழும்பு, செப். 07

**தமிழ் மக்களிடமிருந்து காணிகள் அபகரிக்கப்படுகின்றன.சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்குவதற்காக காடுகள் அழி க்கப்படுகின்றன. இதுதான் ஒரே நாடு ஒரே சட்டமா என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மல நாதன் கேள்வி எழுப்பினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, கரைத்துறைப் பற்று தண்ணிமுறிப்பு குருந்தூர் குள ப்பகுதியில் 1920 ஆம் ஆண்டு 170 ஏக்கர் வயல் நிலம் வன இலாகத் திணைக்களத்துக்கு சொந்தமாக இருந்த நிலையில் 1972 ஆம் ஆண்டு அரச 'பெர்மிட்' மூலம் தமிழ் மக்களுக்கு பகிர்ந் தளிக்கப்பட்டது. தற்போது அந்த 170 ஏக்கரும் தமக்குரிய தெனக் கூறி வன இலாகாத் திணைக்களம் அதனை அபகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

1972 ஆம் ஆண்டு முதல் இந்த 170 ஏக்கர் வயல் நிலத்திலும் விவசாயம் செய்து வந்த மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அந்த மக்களுக்கு அந்த நிலத்தை விட்டால் வேறு நிலங்கள் கிடையாது.எனவே இவ்விடயத்தில் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும்.

திவிலோயா திட்டத்தின் மூலம் சிங்கள மக்களுக்கு விவசாயக்கங்கள் வழங்குவதற்காக 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் அழிக்கப்படுகின்றன. அதேவேளை தமிழ் மக்களின் விவசாயக்காணிகள் அபகரிக்கப் படுகின்றன. இதுதான் ஒரே நாடு ஒரே சட்டமா எனக்கேட்க விரும்புகின்றோம்.



தொல்பொருள் திணைக்களம், வன இலாகத்திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபி விருத்தி அதிகார சபை ஆகியன தமிழ் மக்களின் விவசாயக் காணிகளை ,பூர்வீக காணிகளை எப்படி அபகரிக்க லாம் என்பதிலேயே குறியாக இருக்கின்றன என்றார்.

# சாணேற முழம் சறுக்கும் நிலையே எமது நாட்டில் காணப்படுகின்றது

## பாராளுமன்றில் அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, செப். 07

மக்களின் அவலங்களை அரசியலாக்குவதும், அரசியலுக்காக மக்களை அவலங்களுக்கு உள்ளாக்குவதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கோவிட் 19 எனும் நோயில் இருந்து மக்களைக் பாதுகாப்பதற்கு அரசியல் பேதங்களைக் கடந்து அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை ஒழுங்குபடுத்தும் வகையில் அமுல்படுத்தப் பட்டுள்ள அவசரகால நிலை தொடர்பாக நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்

"சாணேற முழம் சறுக்கும்" என்பார்கள். எமது நாட்டிலும் அவ்வாறான நிலையே காணப் படுகின்றது.

நாட்டில் கொரோனா தொற்றானது நாளாந்தம் 200 மேற்பட்ட மரணங்களை ஏற்படுத்துவதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்களையும் உருவாக்கி வருகின்றது.

எமது நாடு இன்று எமது ஒரு மௌனமான வன்முறைக்கு மோசமாக முகங்கொடுத்துள்ளது. மௌனமாகவே வருகின்ற நோயால் மௌனமாகவே மக்கள் உயிரிழந்து போகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால் இறந்த உடலங்களை தூக்கிச் செல்வதற்கு கூட ஒருவரும் முன்வராத சூழ்நிலை உருவாகியுள்ளது.

இத்தகைய நிலையில் குறித்த அனர்த்தத்தை கட்டுப்படுத்த நாட்டை முடக்குமாறு சுகாதார



தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். மறுபுறம் முடக்கப்படுவதால் நாடு பாரிய பொருளாதாரத்தை இழக்கும் நிலை காணப் படுகின்றது என பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த இரண்டிற்கும் நடுவில் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக அல்லலுறும் நிலை நீடித்து வருகின்றது.

இந்த இரண்டு பக்க அடியிலிருந்து மக்களை பாதுகாக்கவே அரசாங்கம் பல்வேறு நலத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. இந்நிலையில் எதிர்க் கட்சியினர் தமது சுயலாப அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் மனித குலத்தை பலியெடுத்துவரும் இந்த கொரோனா பெருந்தொற்றை இல்லாதொழிக்க உலக நாடுகள் தமக்கிடையே இருந்த அரசியல் பேதங்ளை மறந்து ஒன்றுபட்டு உறுதிகொண்டுள்ளனர்.

அதுபோல இலங்கைத் தீவிலும் அனைத்து தரப்பினரும்தத் தமது சுயநலன்களிலிருந்து விடுபட்டு ஒன்றுபட்டு எமது நாட்டிலிருந்து இந்த பெருந்தொற்றை இல்லாதொழிக்க ஒன்றுபட வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன். வளர்ந்த தேசங்களே இன்று இந்த பெருந் தொற்றால் ஆடிப் போயுள்ள நிலையில் வளர்ந்து வரும் எமது நாடான இலங்கை தீவு எம்மாத்திரம் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் உலக நாடுகளின் தரவுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தீவின் கொரோனா அனர்த்தங்களின் பதிவுகள் குறைவாகவே உள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

# இராணுவ மயமாக்கலை முன்னெடுக்கவே அவசரகால சட்டத்தை அரசால் பிரகடனம்

## பாராளுமன்றத்தில் ஹக்கீம் உரை

கொழும்பு, செப் 07

நாட்டில் இராணுவ மயமாக்கலை நடைமுறைப்படுத்தவே அரசு அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்காக பல நாடகங்களை அரசு அரங்கேற்றுகின்றது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அத்தியாவசிய சேவைகளுக்காக என்றால் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 3 அல்லது 17 ஆம் பிரிவை கொண்டு வந்திருக்கலாம். ஏன் அரசு அதனை செய்யவில்லை?. தேவையற்ற, வேண்டப்படாத அவசரகால சட்டத்தையே அரசு பிரகடனப் படுத்தியுள்ளது. இது நாட்டில் இராணுவ மயமாக்கலை நடைமுறைப்படுத்துவதனையும் எதிர்க்கட்சிகளை அடக்குவதையும் உள்நோக்கமாகக்கொண்டது.

அரசு பல நாடகங்களை நடத்துகின்றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காட்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. இதன் மூலம் மக்களை அரசு ஏமாற்றுகின்றது. வலுக்கட்டாயமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அந்நிய செலாவணி பிரச்னையால் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை லெபனானின் நிலைக்கு



செல்வதாக கூறப்படுகின்றது. லெபனானில் 70 வீதம் வறுமை. அந்த நிலைக்கே இலங்கையும் செல்கின்றது" என்றார்.

# 73.2 பில்லியன் ரூபாய்க்கு குறை நிரப்பு பிரேரணை!

கொழும்பு, செப் 07

தற்போதைய கொரோனா தொற்றுநோய் மற்றும் இதர செலவுகளுக்காக செலவிட 73 ஆயிரத்து 200 கோடி ரூபாய்க்கான குறை நிரப்பு பிரேரணையை அரசாங்கம் நேற்று திங்கட்கிழமை சபையில் சமர்ப்பித்தது.

பாராளுமன்றம் நேற்று திங்கட்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் காலை 10 மணிக்கு கூடிய போதே அரச தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் தலைமைச் சாட்டையர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 73.2 பில்லியன் ரூபாய்க்கான குறை நிரப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட 24 மாவட்டங்களிலும் கொரோனா தொற்று தொடர்பான விட யங்களுக்காகவும் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கும் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணம்வழங்கவும், கொரோனா சிகிச்சை மையங்களுக்காகவும் மீனவர்களுக்கு நிவாரணம் தெற்கு நெடுஞ்சாலையை மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை நீடித்தால், சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதானம், அமைச்சர விக்கட்டிடம் புதுப்பித்தல் என செலவுகள் தலைப் பிடப்பட்டுள்ளன.

# வர்த்தகர்களை கட்டுப்படுத்த அவசரகால சட்டத்தை கொண்டுவந்திருப்பதாக கூறுவது வேடிக்கையானது

## பாராளுமன்றத்தில் அனுரகுமார திஸநாயக்க

கொழும்பு, செப். 07

ஒரே மேசையில் தம்முடன் இருந்து தோள்களில் கை போட்டுக்கொண்டு கலந்துரையாடும் வர்த்தகர்களை கட்டுப்படுத்துவதற்காக அவசரகால சட்டத்தை கொண்டு வந்துள்ளோம் என்று அரசு கூறுவது வேடிக்கையானது என்று ஜே.வி.பி தலைவரும் எம்.பி.யுமான அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க மேலும் கூறுகையில்,

"தற்போது ஜனாதிபதி பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் இரண்டாவது பிரிவை செயற்படுத்தியுள்ளார். சீனி, அரிசி விலையை கட்டுப்படுத்த இது அவசியமற்றது. ஏற்கனவே இருக்கும் சட்டங்கள் போதுமானது. அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக அறிவிக்கப்படும் போது அவசர காலத்தின் கீழ் அறிவிக்கவில்லை. பொருட்களின் விலைகள் கட்டுப்படுத்தப் பட்டது.

இதன்படி முழு செயற்பாடுகளும் அவசரகாலத்தின் கீழ் செயற்படுத்தபடவில்லை. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழேயே கொண்டு வரப்பட்டது. இதன்படி நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் போர்வையில் அதிகாரங்களை எடுத்துள்ளனர்.

பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் முதலாளிகள் யாருக்கும் தெரியாதவர்களா? ஜனாதிபதி தேர்தலில் தோலில்கைகளை போட்டுக்கொண்டு சங்ரில்லா ஹோட்டலில் ஒரே மேசையில் அமர்ந்து உணவருந்தியவர்களே. சில நாட்களில் இந்த வர்த்தகர்கள் ஜனாதிபதி செயலகத்தில் ஒரே மேசையில் இருப்பார்கள். இப்படியிருக்கையில் இந்த வர்த்தகர்களின் அரிசியை பிடிப்பதற்காக சட்டம் கொண்டு வருவதாக



கூறுகின்றனர். அவர்களை கட்டுப்படுத்துவதற்காக அல்ல.

இந்த சட்டத்தை செயற்படுத்தும் போது, இதுவரையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றைய சட்டங்கள் அனைத்தும் செல்லுபடியற்றதாக போகும். அத்துடன் அவசரகால ஒழுங்குவிதிகளுடன் தொடர்புடைய எதுவும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்த முடியாது போகும். இதனால் நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்களை கைப்பற்றுவதற்காகவே இந்த சட்டம் கொண்டுவரப்படுகின்றது. இதற்கு நாங்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றோம்" என்றார்.

# வியாபார பயங்கரவாதத்தை தடுக்கவே அவசரகால சட்டம் பிரகடனமானது

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார விளக்கம்



**கொழும்பு, செப். 07**
**நாட்டில் தற்போது இடம்பெறுவது வியாபார மாபியா அல்ல, வியாபார பயங்கரவாதம், இதனை அவசரகால சட்டத் தின் மூலமாகவே தடுக்க முடியும். அதனால்தான் ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி யுள்ளார் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதேஇவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அவசரகால சட்டம் ஜன நாயக எதிர்ப்பு வேலைத்திட் டம் என எதிர்கட்சிகள் கூறு கின்றனர். ஆனால் இது ஜன நாயக விரோத செயல்பாடு அல்ல. மக்களின் அத்தியாவசிய பொருட்களை பதுக்கும், மக்க ளின் பணத்தை கொள்ளையடிக் கும், நெல் ஆலைகளை வைத் துக்கொண்டு அரிசி ஊழலில் ஈடுபடும், ஒரு சில வியாபார மாபியாக்காரர்களின் செயல் பாடுகளை தடுத்து மக்களுக் கான நுகர்வுப் பொருட்களை பெற்றுக்கொடுக்க எடுக்கும் செயற்பாடு ஒருபோதும் ஜன நாயக விரோத செயற்பாடா காது. எனவே அவசரகால நிலைமையை பிரகடனப்படுத் தியமை ஜனநாயக செயல்பாடே.

நாட்டின் விலை உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் பதுக்கல் நிலைமையை தடுக்க சாதாரண சட்டத்தை கையாள முடியும் என எதிர்க்கட்சி உறுப் பினர்கள் கூறுகின்றனர். சாதா ரண சட்டத்தில் இதனை கையாள நடவடிக்கை எடுத்தால் காலம் கடக்கும், நீதிமன்றங்களை நாடி இறுதியாக தீர்ப்பு ஒன்று கிடைக்கும் வரைக்கும் மக்கள் அதிக விலையில் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய நேரிடும். அதேபோல் அவசரகால சட்டமானது அத்தியாவசிய பொருட்களின் பதுக்கல், ஊழலுக்கு எதிராக மட்டுமே கையாளப்படும் வேறு எந்த காரணத்திற்கும் இது கையாள ப்படாது என ஜனாதிபதியே வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். ஆகவே எக் காரணம் கொண்டும் இதனை பயன்படுத்தி ஜனநாயக அடக் குமுறை முன்னெடுக்கப்படாது.

அதேபோல் அவசரகால நிலைமை பாராளுமன்றதிற்கு கட்டுப்பட்டதாகும். ஒரு போதும் பாராளுமன்ற அதி காரத்தை மீறிய விதத்தில் அவசரகால சட்டம் கையாளப் படவில்லை. அத்துடன் மொத்த விற்பனை, உற்பத்திக் கொள் வனவு மற்றும் தொகை பங்கீடு ஆகிய மூன்று விடயங்களையும் அரசாங்கம் முழுமையாக கையாள வேண்டும். அதுவே எதிர்கால நெருக்கடி நிலைமை யில் சாதகமான தீர்மானங்களை எடுக்க வசதியாக அமையும். சீனா இதற்கு மிகச்சிறந்த உதா ரணம். ஆகவே அதனை முன்னு தாரணமாகக் கொண்டு இலங் கையிலும் தீர்மானம் எடுக்க வேண்டும்.

தற்போது நாட்டில் இடம் பெறும் அத்தியாவசிய பொருட்களின் பதுக்கலில் ஈடுபடும் நபர்கள் அரச நண் பர்கள் என எதிர்க்கட்சி உறுப் பினர்கள் கூறுகின்றனர். அவர் கள் நண்பர்கள் என்றா லும் அவர்கள் தவறு செய்யும் வேளையில் அவர்களுக்கு எதி ராகவும் வாள்வீச ஜனா திபதி தயாராகியுள்ளார் . அதே போல் தற்போது இடம்பெறு வது வியாபார மாபியா அல்ல, வியாபார பயங்கரவாதம், இதனை அவசரகால சட்டத் தின் மூலமாகவே தடுக்க முடி யும். அதனாலேயே ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகட னப்படுத்தியுள்ளார் - என்றார்.

# ஜனநாயக செயல்பாடுகளை நசுக்கவே அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டது

## சுமந்திரன் எம்.பி. குற்றம்சாட்டு

கொழும்பு, செப். 07
அவசரகால சட்டத்தை சாதகமாக்கி இரவோடு இரவாக தனது நிறைவேற்று அதிகா ரத்தை பயன்படுத்தி ஜனநாயக செயல்பாடுகளை நசுக்கும் நட வடிக்கையை முன்னெடுக்கவே ஜனாதிபதி நினைக்கின்றார். நாட்டை இருட்டுக்குள் வைத் திருக்கவே அவர் முயற்சிக்கின் றார். உணவு மாபியாவை கையாள அவசரகால சட்டத்தை கொண் டுவருவதாக கூறி ஜனநாயக அடக்குமுறையை கையாள அரசு திட்டமிடுகின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. எம்.ஏ. சுமந்திரன் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குற்றம்சாட் டிய சுமந்திரன் எம்.பி. மேலும் கூறுகையில்,

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழே 17ஆவது பிரிவிலே இரண்டாம் பாகம் நடைமுறைப்படுத் தப்பட்டுள் ளது. இதனை கொண்டு ஜனா திபதி அவசரகால நிலைமை களை நடைமுறைப்படுத்தியுள் ளார். ஆனால் அவசரகால சட் டத்தில் முன்னெடுக்க வேண் டிய முறைமை ஒன்று உள்ளது, பாராளுமன்ற முறைமையின் கீழ் இதனை செய்ய வேண்டும். ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தக் கூடாது. இவற்றை கையாள வெவ்வேறு சட்டங்கள் எம்மி டத்தில் உள்ளன .

1971 ஆம் ஆண்டில் இருந்தே அவசரகால சட்டம் நடைமுறையில் உள்ளது. பல் வேறு சந்தர்ப்பங்களில் அவசர கால நிலைமை கையாளப்பட்டு கைதுகள் இடம்பெற்றன, யுத்த காலத்தில் கூட அவசர கால சட்டத்தை பயன்படுத்தி தவறான செயல்கள் இடம்பெற் றன. இப்போதும் உணவு மாபி யாவை கையாள அவசரகால சட்டத்தை கொண்டுவருவதாக கூறி ஜனநாயக அடக்குமு றையை கையாள அரசாங்கம் நினைக்கின்றது.

இன்று (நேற்று)பாராளுமன் றத்தில் அவசரகால நிலைமை களை பிரகடனப்படுத்தியதை ஆதரிக் குமாறும், அதற்கு இணங்கு மாறும் அரசால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. உணவு விநியோகம் மற்றும் விலைவாசி அதிகரிப்பு என் பவை தொடர்பில் எம்மிடத் திலும் பாரிய அக்கறை உள் ளது. ஆனால் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத் தித்தான் இதனை கட்டுப்படுத்த முடியுமா என்ற கேள்வியை கேட்டால் இல்லை என்றே கூற வேண்டும்.

ஏனென்றால், உணவுப் பொருட்களின் விலைவாசி அதிகரிப்பு மற்றும் உணவு உணவுப்பொருட்களை பதுக்கி வைப்பவை, உணவுப்பொருட் களை மக்களுக்கு விற்காது தடுப்பது அல்லது விற்காமல் மறுப்பது போன்ற விடயங் களை எல்லாம் வேறு சாதாரண சட்டங்களில் கீழ் செய்ய முடியும். அதற்கான பிரிவுகளும் உள்ளன. இவற்றை கையாளும் சட்டதிட் டங்களும் நாட்டில் ஏற்கனவே அமுலில் இருக்கின்றன.

அத்தியாவசிய சேவைகள் என கூறி, ஏதேனுமொரு சேவையை பிரகடனப்படுத்த வேண்டும் என்றால் அதற் கெண்டு ஒரு சட்டமே இரு கின்றது. அதன் கீழே பிரகட னப்படுத்தலாம். பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழேயே 17ஆ வது பிரிவிலே பாகம் மூன்றிலே அதற்கான இடம் இருக்கின்றது. பாகம் இரண்டை நடைமுறைக்கு கொண்டுவருகின்ற போதுதான் நாடு அவசரகால நிலைக்குள்ளே தள்ளப்படுகின்றது. அப்படிச் செய்யாமல் அதற்கு அடுத்த பாகத்திலே இருக்கின்ற இதற் கென்ற விசேட அதிகாரத்தை ஜனாதிபதி உபயோகித்திருக்க முடியும்.

ஆனால் தற்போது வெளியி டப்பட்டுள்ள வர்த்தமானி பிரசுரத்திலேயே சொல்லப்பட் டுள் ள விதத்திலே ஒரு கபட மான எண்ணம் இருப்பது தெளிவாக எமக்கு தெரிகின்றது -என்றார்.

# தடுப்பூசி வழங்கல் பூர்த்தியானபின் அபிவிருத்தி கிராமத்துக்கே வரும்!

## சாகர காரியவாசம் எம்.பி.



கொழும்பு, செப். 07
"அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் அபிவிருத்திக்கான அடித்தளத்தை அமைத்து விட்டோம். இன்று வரை பொறுமையாக இருந்தது போல இன்னும் சொற்ப காலத் திற்கு பொறுத்திருக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்கின் றேன். தடுப்பூசியலிக்கப்படு வதை நிறைவுக்கு கொண்டு வந்த பின்னர் அபிவிருத்தி களை உங்கள் கிராமத்திற்கே எடுத்துவரும் செயற்பாட்டை நாங்கள் தொடங்கவுள்ளோம்."

இவ்வாறு கூறியிருக்கின்றார் சிறிலங்கா பொதுஜன பெரமு னவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம். பொதுஜன பெரமுனவின் பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

"நாடும், உலகமும் இன்று மிகப்பெரிய நெருக்கடியில் சிக்கியுள்ள சந்தர்ப்பத்திலும் இதனை வைத்துகலங்கிய குட் டையில் மீன்பிடிக்கின்ற தரப்பி னரும் இருப்பதையிட்டுக் கவ லையடைகின்றோம். இந்த நாட்களில் சமூக வலைத்தளங் களில் பார்வையிட்டால், இந்த நாடு பற்றி எந்த அளவுக்கு கீழ்த்தரமாக பதிவிடுகின்றார் கள் என்பதை அறியலாம். இந்த அனைத்து முயற்சிகளும் திட்ட மிடப்பட்டே நடத்தப்படு கின்றன.

கடந்த வருடங்களாக அழி வுக்கு ஏற்பட்டிருந்த இவற்றை ஆரம்பத்திலிருந்தே மேற்கொள் ளஎமக்கு நேரிட்டுள்ளது. அடிக்கல் நட்டு அடித்தளம் இடுகின்றபோது அது வெளிப் படையாகத் தெரியாது. கடந்த இரண்டு வருடங்களாக பல் வேறு பிரச்னைகள், கோவிட் நெருக்கடியை தீர்க்க தடுப்பூசி இறக்குமதி என அனைத்து விடயங்களையும் செய்து கொண்டுவருகின்ற நிலையி லேயே அபிவிருத்திகளையும் நடத்திவருகின்றோம்.

உங்களது எதிர்காலத்தை குறித்து நம்பிக்கை கொள் ளுங்கள். அவ்வாறு இன்றேல் நீங்களே உங்களது எதிர்காலத்த அழிக்கப்போகின்றீர்கள் என் பதால் இந்த சூழ்ச்சிகள், சக்தி கள் நாட்டையும், அபிவிருத்தி களையும் அழிக்கின்ற தரப்புக்கு இடமளிக்க வேண்டாம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் கேட்டுக்கொள்கின் றேன்.

அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் அபிவிருத்திக்கான அடித்தளத்தை அமைத்துவிட் டோம். இன்றுவரை பொறு மையாக இருந்ததுபோல இன் னும் சொற்ப காலத்திற்கு பொறுத்திருக்கும்படி கேட் டுக்கொள்கின்றேன். தடுப்பூசி யளிக்கப்பட்டு நிறைவுக்கு கொண்டுவந்த பின்னர் அபி விருத்திகளை உங்கள் கிராமத் திற்கே எடுத்துவரும் செயல் பாட்டை நாங்கள் தொடங் கவுள்ளோம்" என அவர் தெரி வித்தார்.

# அம்பாந்தோட்டையில் 'பைஸர்' தடுப்பூசி ஏற்றுவது குறித்து கேள்வி எழுப்புவது ஏன்?

## இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர கேள்வி

கொழும்பு, செப். 07
அம்பாந்தோட்டையில் பைஸர் தடுப்பூசி ஏற்றும்போது கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி கள் மன்னாரில் பைஸர் தடுப்பூசி ஏற்றும்போது ஏன் கேள்வி எழுப்பவில்லை என்று இரா ஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் தொடர் பான விவாதத்தில் உரையாற் றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய இராஜாங்க அமைச் சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவிக்கையில்,

மேல்மாகாணத்தில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட அனை வருக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றியிருந்தால் இன்று நாட் டில் இந்த நிலைமை ஏற்பட்டி ருக்காது. கொரோனா தடுப்பூசி ஏற்றும்போது அது தொடர் பில் எதிர்க்கட்சியினர் தவறான பிரசாரங்களை முன்னெடுத்து மக்களை குழப்பினர்.

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலின் பேரிலேயே தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. இந்நிலையில் அம்பாந்தோட் டையில் உள்ளவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றியமை தொடர்பில் எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்புகின்றனர். அப்படியானால் மன்னாரில் உள்ளவர்களுக்கு இதே பைஸர் தடுப்பூசி ஏற்றிய போது ஏன் கேள்வி எழுப்பவில்லை? மன்னாரில் ஏற்றியது சரி, அம் பாந்தோட்டையில் ஏற்றியது மட்டும் பிழையா?- என்றார்.

# உணவு பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடில்லை

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 07

**இலங்கையில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கக்கூடிய வகையில் அரசி, மரக்கறி உள்ளிட்ட உணவுப்பொருட்கள் நாட்டில் உள்ளதாகவும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**



நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற அவசரகால பிரகடனம் தொடர்பான விசேட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஓகஸ்ட் 30 ஆம் திகதி அவசரகால பிரகடனம் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 14 நாட்களுக்குள் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, இதனை பாராளுமன்றின் ஊடாக செயற்படுத்த முடியும்.

இவ்வாறானதொரு சட்டம் நாட்டுக்குத் தேவையில்லை என்றால் இதனை நிறைவேற்றத் தேவையில்லை. அவசரகால சட்டம் கொண்டுவரப்படுவது ஒன்றும் இது புதிதல்ல. கடந்த காலங்களில் வெல்லம்பிட்டியவில் குப்பை மேடு சரிந்துவிழுந்த காலத்தில்கூட, நல்லாட்சியாளர்கள் அவசரகாலச் சட்டத்தை கொண்டுவந்திருந்தார்கள்.

இன்று சர்வதேச செய்திகளில் இலங்கையில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், இலங்கையில் உணவுத்தட்டுப்பாடு கிடையாது என்பதை நான் அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கு உணவு மாபியாவே இடம்பெற்று வருகிறது.

இதனைக்கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த அவசர காலப் பிரகடனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் எனும் ரீதியில் மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி உணவு வழங்க வேண்டியது எமது கடமையாகும். விவசாயத்துறை அமைச்சர் என்ற வகையில் நான் ஒன்றைக் கூற வேண்டும்.

கடந்த காலங்களில் இரண்டு போகத்தையும் சேர்த்து நாம் 8 இலட்சம் எக்டயாருக்கு நெற்பயிர்ச் செய்கை செய்துள்ளோம். 5.3 மில்லியன் மெற்றிக் தொன் நெல்லை உற்பத்தி செய்துள்ளோம்.

இதனை 1.6 ஆல் பிரித்தால் 3.2 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி எம்மிடம் தற்போது உள்ளது. இதனால், இலங்கையில் ஒருபோதும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படவில்லை என்பதை நான் இங்கு உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

இந்நிலையில், அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவ ஆட்சிக்கு ஜனாதிபதி வழிவகுப்பதாக எதிர்க்கட்சியினர் கூறிவருகிறார்கள்.

ஆனால், கடந்த காலங்களில் எதிர்க்கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு போராட்டத்தையும் தண்ணீர் தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டோ, தடியடி நடத்தியோ ஜனாதிபதி கட்டுப்படுத்தவில்லை. போராடிய எவரையும் கைது செய்யவில்லை. அவசரகால சட்டத்தை அன்றே கொண்டுவந்து ஜனாதிபதியால் போராட்டங்களை கட்டுப்படுத்திருக்க முடியும்.

ஆனால், அவர் அன்று அவ்வாறு செய்யவில்லை என்பதை எதிர்க்கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும். அத்தோடு, இந்த அவசரகால சட்டமானது மக்களுக்காக கொண்டுவரப்பட்டது என்பதையும் இவர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்- என்றார்.

# ஜப்பானிய யென்னுக்கு எதிரான ரூபாயின் பெறுமதி கடும் வீழ்ச்சி

கொழும்பு, செப். 07

ஜப்பானிய யென்னுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 198 ரூபாய் 50 சதமாகவும் விற்பனை பெறுமதி 203 ரூபாயாகவும் காணப்படுகின்றது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 307 ரூபாய் 13 சதமாகவும் விற்பனை பெறுமதி 317 ரூபாய் 47 சதமாகவும் உள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 263 ரூபாய் 54 சதம், விற்பனை பெறுமதி 273 ரூபாய் 52 சதம் ஆகும்.

அத்துடன், ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 02 சதம், விற்பனை பெறுமதி 2 ரூபாய் 09 சதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க இனியும் காத்திருக்க வேண்டியதில்லை

## பேராசிரியர் நீலிகா மாலவிகே கூறுகிறார்

கொழும்பு, செப். 07

பாடசாலைகளை மீண்டும் திறக்க காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு, மூலக்கூறு மற்றும் நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்தார்.

பல மேற்கத்திய நாடுகளில் கோவிட்-19 பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், பாடசாலைகள் இன்னும் திறந்தே உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்த ஆண்டு மே மாதத்துக்குள், இலங்கை உட்பட 23 நாடுகள் மட்டுமே பாடசாலைகளை மூடிவிட்டன. யுனிசெப் நிர்வாகப் பணிப்பாளரும் இதைத் தெரிவித்தார்.



கல்வி குறித்த ஐ.நா இணையத்தளத்தின்படி, மேற்கத்தேய நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கோவிட் -19 நோய்த் தொற்றாளர்கள் இருந்தபோதிலும் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன" என்றும் பேராசிரியர் நீலிகா மாலவிகே குறிப்பிட்டார்.

# நாட்டில் கடந்த 10 நாள்களில் 1,983 கோவிட் உயிரிழப்புகள்

கொழும்பு, செப். 07

நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரத்தால் நாளுக்கு நாள் மரணங்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து உயிரிழப்புகள் 10,000ஐ தாண்டியுள்ளது. இதேவேளை, இறுதி 10 நாள்களில் நாட்டில் 1,983 மரணங்கள் பதிவாகியுள்ளன.

டெல்டா திரிபினால் நாட்டில் மீண்டும் கொரோனா நோயாளர்கள் அதிகரிப்பதுடன், மரணங்களும் 200 ஐ தாண்டியுள்ளது. அதன்படி, 4 ஆம் திகதி பதிவான 189 மரணங்களுடன் மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 10,140 ஆக பதிவாகியது.

நாட்டில் முதல் ஆயிரம் கொரோனா மரணங்கள் பதிவாகுவதற்கு 13 மாதங்கள் சென்றாலும், இறுதி 2,000 மரணங்கள் 10 நாள்களில் பதிவாகியுள்ளன.

# யாழில் கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், செப். 07

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

தற்போது உள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலைமை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்ற போக்கு சற்று குறைவடைந்து காணப்படுகின்றது .

யாழில் நேற்று முன் தினம் 213 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 13 ஆயிரத்து 944 பேர் மாவட்டத்தில் நேற்று வரை தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இறப்புக்களை பொறுத்தவரை 274 ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம் 5641 குடும்பங்கள் யாழில் தனிமைப்படுத்தலில் உள்ளன.

மேலும் யாழ். மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முதலாவது டோஸ் தடுப்பூசி 2 லட்சத்து 965 ஆயிரத்து 315 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஆனது நேற்று முன் தினம் வரை 2 இலட்சத்து 15 ஆயிரத்து 552 பேருக்கு வழங் கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் 30 வயதிற்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் சுகாதாரப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்குரிய விவரங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பியிருக்கிறோம். அதற்குரிய அறிவுறுத்தல் கிடைத்தபின் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

மேலும் தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்று நிலைமையானது அபாய நிலையிலேயே காணப்படுகின்றது. பொதுமக்கள் பொது முடக்கத்தை துஸ்பிரயோகம் பண்ணாது தங்களையும் பாதுகாத்து சமூகத்தையும் பாதுகாக்க செயற்பட சகலவிதமான விழிப்புணர்வு செயற்பாடுகளும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்கு சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

அத்தியாவசிய பொருள்களை பொறுத்தவரை சீனி மற்றும் எரிவாயு போன்றவற்றுக்கு கடந்த காலத்தில் தட்டுப்பாடு காணப்பட்டது. எரிவாயு பிரச்னை தீர்க்கப்பட்டுவிட்டது.

மேலும் சீனியின் விலையும் தற்போது குறைவடைந்துள்ளது. அதேநேரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தினூடாக அதே நேரம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இணைந்த வகையில் இந்த சீனி பகிர்ந்தளிப்புக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என கண்காணிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மற்றும் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்வோரை பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக தடுத்து நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருள்கள் விநியோகத்தை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே வியாபாரிகள் பொருட்களை பாதுகாத்து நியாயமான விலையில் விற்பனை செய்ய வேண்டும்-என்றார்.

# ஓட்டோக்களை வரையறைகளுடன் சோடனை செய்வதற்கு அரசு அனுமதி

கொழும்பு, செப். 07

ஓட்டோக்களை மாற்றியமைப்பது தொடர்பான விதிமுறைகளை திருத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. புதிய வர்த்தமானியின் படி, ஓட்டோக்களை பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் சோடனை செய்ய அனுமதி வழங்கி சில விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஓட்டோ தொழிற்சங்கங்களுக்கிடையிலான கலந்துரையாடலைத் தொடர்ந்து சில விதிமுறைகளைத் திருத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

# பிரதமர் மஹிந்த இத்தாலி செல்கிறார்

கொழும்பு, செப். 07

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலிக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

இத்தாலியில் நடைபெறும் சர்வதேச மாநாடொன்றில் ஆரம்ப உரை நிகழ்த்துவதற்காகவே பிரதமர் அங்கு செல்கின்றார் எனவும், இதன்போது முக்கியத்துவம்மிக்க இராஜதந்திர சந்திப்புகள் இடம்பெறவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்தவாரம் குறித்த சர்வதேச மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

ஈழநாடு



# ஜெனிவாவுக்கான அறிக்கையிலும் முரண்படும் தமிழ் தலைமைகள்

அகிலன்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையேயான பிளவு மீண்டும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. ஒரே குரலில் ஜெனிவாவுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையிலான அறிக்கை ஒன்றை அனுப்பிவைப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்திருக்கின்றன. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நான்காக பிளவுபட்டு தமது அறிக்கைகளைத் தனித்தனியாக ஜெனிவாவுக்கு அனுப்பிவைக்கின்றன. இதில் ஐந்தாவதாக அனந்தி சசிதரன் தலைமையிலான கட்சி இந்த அணிகள் எதற்குள்ளும் செல்லாமல் தனித்து நிற்கின்றது.

ஜெனிவா உள்ளிட்ட பொதுவான பிரச்சினைகளைக் கையாளும் வகையில் தமிழ்க் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சி ஒன்று சில மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ரெலோ ஆரம்பித்த இந்த முயற்சியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பத்திலேயே இணைந்துகொள்ள மறுத்துவிட்டது. இது தொடர்பில் கொள்கை விளக்கம் ஒன்றை அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் வெளியிட்டிருந்தார். ஏனைய கட்சிகளை ஒருங்கிணைத்து பொதுவான கோரிக்கை மனு ஒன்றை அனுப்பிவைப்பதற்கான முயற்சிகளை ரெலோ முன்னெடுத்தது.

**மெய்நிகர் சந்திப்பும் இணக்கப்பாடுகளும்**

இதன் அடிப்படையில் ஆகஸ்ட் 22 ஆம் திகதி "சூம்" தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மெய்நிகர் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அதன் பேச்சாளர் சுரேந்திரன், ஈ.பி.ஆர்.எல். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் என்.சிறிகாந்தா ஆகியோர் இதில் கலந்துகொண்டிருந்தார்கள். மூன்று விடயங்கள் இதில் ஆராயப்பட்டன. ஒன்று - ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படக்கூடிய விடயங்களை அடையாளங்காணல், இரண்டு - ஜெனிவாவுக்கு அறிக்கை ஒன்றைத் தயாரித்தல், அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை முயற்சிகள்.

இதில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படக்கூடிய விடயங்களாக நான்கு விடயங்கள் அடையாளங்காணப்பட்டன.

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கை,
2. அரசியல் கைதிகளின் விடுதலை,
3. திட்டமிட்ட குடியேற்றம் காணி அபகரிப்பை நிறுத்துவதற்கான கோரிக்கை.
4. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கையையும், இந்தியாவையும் கோருவது. இந்த நான்கு விடயங்களும் ஒருமித்த நிலைப்பாட்டில் செயல்படக்கூடிய விடயங்களாக இனங்காணப்பட்டன.

ஜெனிவா மற்றும் பேச்சு முயற்சிகள் தொடர்பாக ஆராயப்பட்ட போது முக்கியமான ஒருவிடயத்தை சிறிகாந்தா சுட்டிக்காட்டினார். அதாவது, "இவ்விடயத்தில் ஒரு உடன்பாடு ஏற்பட்டாலும், பின்னர் சுமந்திரன் தனியாகச் செயற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இதில் ஏற்படக்கூடிய இணக்கப்பாட்டுக்கு முரணாக சுமந்திரன் செயல்படமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இதற்கான உறுதியை மாவை சேனாதிராஜாவால் வழங்க முடியுமா?" என கேள்வி எழுப்பிய சிறிகாந்தா, கூட்டத்துக்கு சமந்திரனும் அழைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அதனையடுத்தே மெய்நிகர் சந்திப்பில் சுமந்திரனும் இடைநடுவில் இணைக்கப்பட்டார். சந்திப்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு சுமந்திரனும் இணக்கம் தெரிவித்தாகச் சொல்லப்படுகின்றது.

**ஜெனிவாவுக்காக தயாரான கடிதம்**

இந்தப் பின்னணியில்தான் ஜெனிவாவுக்கான கடிதம் தயாரிக்கப்பட்டது. ரெலோவின் முன்னெடுப்பில் தயாரிக்கப்பட்ட இந்தக் கடிதம் - தமிழ்த் தேசயக் கட்சிகளின் தலைவர்களுக்கு கையொப்பங்களைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டது. தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சிறிகாந்தா ஆகியோர் இதில் கையொப்பமிட்டனர்.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கும் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டபோதிலும், கடந்த சனிக்கிழமை வரை அவர் இதில் கையொப்பமிடவில்லை. சம்பந்தன், சுமந்திரனால் மற்றொரு கடிதம் தயாரிக்கப்படுவதாகவும், அதனால் - இதில் தன்னால் கையொப்பமிட முடியாது எனவும் மாவைதெரிவித்ததாக தெரிகின்றது. அனந்தி சசிதரனும் இதில் கையொப்பமிட மறுத்துவிட்டார். இந்தப் பின்னணியில் ஏனைய ஐந்து கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்ட நிலையில், இந்தக் கடிதம் சனிக்கிழமை ஜெனிவாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

**தமிழரசுக் கட்சிக்குள்ளும் கடிதத்தினால் குழப்பம்**

அதேவேளையில், சம்பந்தன், சுமந்திரன் தரப்பால் தயாரிக்கப்பட்ட கடிதமும் தமிழரசுக் கட்சிக்குள் புயலைக் கிளப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் "இராணுவமும், விடுதலைப் புலிகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனித உரிமைகளை மீறியுள்ளனர். இவற்றில் சில போர் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாகக் கருதப்படும்" என்று பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையின் விடயமும் அந்தக் கடிதத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. இதற்கு தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

**ஜெனிவா போன்ற பொதுவான விடயங்களிலேயே இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத தமிழ்க் கட்சிகள் குறித்து மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. பலம்வாய்ந்த உறுதியான தலைமை இல்லாத நிலையில் தமிழ் மக்கள் உள்ளார்கள் என்பதை இது வெளிப்படுத்துகின்றது.**

அத்துடன், அந்த விடயத்தை நீக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர் எனத் தெரிகின்றது.

சிறிதரன், சார்ள்ஸ் நிமலநாதன், கலையரசன் ஆகிய எம்.பி.க்களே இந்தக் கடிதத்துக்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள். இது தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், எங்களுடைய கருத்தை கணக்கில் எடுக்காது விட்டால், மனித உரிமைகள் ஆணையாளருக்கு நாம் தனித்து கடிதம் ஒன்றை அனுப்புவோம். தற்போது தயாரிக்கப்பட்ட கடிதத்தில் கையொப்பம் இடமாட்டார் என்று தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்துக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பாராளுமன்றம் நேற்று கூடிய போது, கூட்டமைப்பின் கடிதத்தில் கையொப்பங்களைப் பெறுவது சுமந்திரனின் திட்டமாக இருந்தது. ஆனால், தமிழரசுக் கட்சியின் 3 எம்.பி.க்களுடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் இதில் கையொப்பமிடுவதற்கு மறுப்புத் தெரிவிப்பதற்குத் தீர்மானித்திருந்தார்கள். சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மட்டுமே இந்தக் கடிதத்தின் சனிக்கிழமை மாலை வரையில் கையெழுத்திட்டிருந்தார்கள். அதனைவிட, மாவை சேனாதிராஜா, மற்றும் காணக்கியன் ஆகியோர் இதில் கையெழுத்திடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இருந்த போதிலும், கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பங்களையடுத்து தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு ஞாயிறு காலை அவசரமாகக் கூட்டப்பட்டது. மெய்நிகர் சந்திப்பாக இது இடம்பெற்றது. இதில் குறிப்பிட்ட கடிதம் கடும் விமர்சனத்துக்குள்ளானதாகத் தெரியவருகின்றது. தமிழரசுக் கட்சியின் அங்கீகாரத்தைப் பெறாமல் இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதாக குற்றச்சாட்டு இதன் போது முன்வைக்கப்பட்டது.

விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் இம்முறை ஜெனிவாவுக்கான கடிதத்தில் கையொப்பமிடவில்லை. அனந்தி சசிதரனிடம் இதற்கான கையொப்பம் கேட்கப்பட்டதாகவும், ஆனால், கட்சியின் செயற்குழுவைக் கூட்டி அதில் முடிவெடுக்கப்பட்ட பின்னரே இதில் தன்னால் கையொப்பமிட முடியும் என அனந்தி சசிதரன் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. இருந்தபோதிலும், ரெலோவின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்ட அறிக்கையில், சில விடயங்களை அனந்தி சசிதரன் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிகின்றது.

குறிப்பாக "தமிழ் இனம்" என்ற சொல் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்த போதிலும், வரைவைத் தயாரித்தவர்கள் அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. அதனைவிட, போரின் நேரடிச் சாட்சியாக இருக்கும் தான் எழுந்தமானமாகச் செயல்பட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இருந்தபோதிலும், அனந்தி சசிதரன் தனியான ஓர் அறிக்கையை அனுப்பிவைப்பதற்குத் திட்டமிடவில்லை எனத் தெரிகின்றது. வழமையாக பேரவையின் கூட்டங்களில் கலந்துகொள்ளும் அனந்தி இம்முறை பெருமளவுக்கு மெய்நிகர் நிகழ்வாகவே ஜெனிவா கூட்டத் தொடர் இடம் பெறுவதால் அதில் கலந்துகொள் ளாட்டார்.

**ஆணையாளர் அறிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துமா?**

அதேவேளையில், கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜெனிவாவுக்கு தனியான அறிக்கை ஒன்றை அனுப்பிவைக்கவுள்ளது. இது தொடர்பில் அவர்கள் தரப்பில் ஆராயப்பட்டுவருவதாகவும் அடுதத ஒரு இரு தினங்களில் அறிக்கை தயாராகிவிடும் எனவும் தெரிகின்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை 13 ஆம் திகதி ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. ஆணையாளரின் அறிக்கையும் அன்றைய தினம் வெளியிடப்படும். தமிழ்த் தரப்பினரால் அனுப்பப்படும் கடிதங்கள் அதில் எந்தளவுக்குத் தாக்கத்தைச் செலுத்தும் என்பது தெரியவில்லை. ஆனால், அதனைத் தொடர்ந்து இடம்பெறக் கூடிய விவாதங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இவை அமையலாம்.

அதேவேளையில், ஜெனிவா போன்ற பொதுவான விடயங்களிலேயே இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத தமிழ்க் கட்சிகள் குறித்து மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

பலம்வாய்ந்த உறுதியான தலைமை இல்லாத நிலையில் தமிழ் மக்கள் உள்ளார்கள் என்பதைத் தான் இது வெளிப்படுத்துகின்றது. ■

# இராணுவ மயமாக்கல் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ள அவசரநிலை பிரகடனம்

முனாஸ் முஷ்ராக்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வாரம் அவசரகால நிலையை பிரகடனம் அரசியல் ரீதியாக கடும் எதிர்ப்புக்களைத் தூண்டியுள்ள அதேவேளை, இறக்குமதியாளர்களும், வர்த்தகர்களும் இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாகப் பதுக்குதல், அதிக விலை அறவிடுவதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சந்தை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக, அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்த மாகக் கொள்வனவு செய்து மக்க ளுக்கு நியாயமான விலைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கும், அரச வங்கிகளின் மூலம் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கடன், கடன் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அறவிடப்படக்கூடிய வகையில் இந்த அவசரகால நிலை நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால், அவசரகால நிலையின் கீழான கட்டுப்பாடுகள் விநியோக நெருக்கடியை உருவாக்கக்கூடும் என இறக்குமதியாளர்கள் எச்சரிக்கின்றனர். அதே நேரத்தில் இந்த நடவடிக்கை நாட்டிற்கு ஆபத்தை விளைவிப்பதாக வும், சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் எனவும் எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்ட ளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் வை ஆவது பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறை கள், ஓகஸ்ட் 30-ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

எனினும் வர்த்தகர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் வர்த்தக அமைச்சு அதிகாரிகளை ஒருவர் பின் ஒருவராகச் சந்தித்து அவசரகால நிலையை பிரகடனம் செய்யும் முடிவை மீளாய்வு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை மறுத்துள்ள அரசு, நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாகப் பதுக்குதல், அதிக விலை அறவிடுவதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சந்தை முறைகேடுகளைத் தவிர்க்கும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வசதியாகவே இந்த அவசர நிலை அறிவிக்கப்பட்டதாக அரசு கூறியுள்ளது.

சாதாரண பொதுமக்களின் மத்தியில் இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல என்ற நியமிக்கப்பட்டுள்ளமை எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்று இந்த விடயத்தில் எதிர்ப்புக்களை மேலும் தூண்டியுள்ளது.

ஜனநாயக நாடான இலங்கையில் சிவில் மற்றும் பொது சேவைகளை கையாளத் தேவையான சிவில் அமைப்புக்கள் உள்ளன. நெருக்கடி நிலைகளை இவ்வாறான குழுக்களே கையாளுகின்றன என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன நிக்கே ஏசியாவிடம் கூறினார். அரச நிறுவனங்களில் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கல் குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

துரதிருஷ்டவசமாக, இந்த ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததிலிருந்து, அவர் சிவில் சேவை நிறுவனங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. இராணுவத்தினரையே முக்கிய பொறுப்புக்களில் நியமித்தார். இதனால் தகுதியுள்ள பல சிவில் அதிகாரிகள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ 2019 -இல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்கில் தனக்கு நம்பகமான இராணுவ அதிகாரிகளையே உயர் பதவிகளுக்கு நியமித்துள்ளார். இலங்கையின் கொவிட் பணிக்குழு தலைவராகக் கூட இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் சுங்கத் திணைக்களம், துறைமுக அதிகார சபை போன்றவற்றிலும் இராணுவத்தைச் சேர்ந்த பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொவிட் பணிக்குழுவில் சுகாதார நிபுணர்கள் மற்றும் வைரஸ்கள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றவர்களே பணியமர்த்தப்பட வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக பொருத்தமற்ற நபர்களை பொருத்தமற்ற பதவிகளில் ஜனாதிபதி நியமித்துள்ளார் என எரான் விக்கிரமரத்ன கூறினார். அவசரகால நிலை, உள்நோக்கத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது. நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுப்பாடுகளை விதிக்கவே இது வழிவகுக்கும் என அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் சதித் திட்டத்தை முறியடிக்க அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தை நியமிப்பதைத் தவிர வேறு வழியில்லை என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். இதேவேளை, அவசர நிலை அறிவிக்கப்பட்ட மறுநாள் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது களஞ்சியசாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 29,900 மெட்ரிக் தொன் சீனி கண்டுபிடிக்கப்பட்டதாக அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என்.டீ. எஸ்.பி.நிவுன்ஹெல்ல தெரிவித்தார்.

இதற்கிடையில் இறக்குமதியாளர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு உணவுப் பொருட்களை சேமித்து வைத்திருக்க முடியாது என அரசாங்கம் குறிப்பிடுவது, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என நிக்கே ஏசியாவிடம் பேசிய பெயர் குறிப்பிட விரும்பாத சீனி இறக்குமதியாளர் ஒருவர் தெரிவித்தார். நாங்கள் எப்போதும் பொருட்களைச் சேமித்து வைத்து அவற்றை தேவைகளின் அடிப்படையில் விநியோகிப்போம். இந்நிலையில் நாங்கள் களஞ்சியப்படுத்தியுள்ள பொருட்களைக் கைப்பற்றுவது நியாயமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை ரூபாயின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவது இறக்குமதியாளர்களுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்துவதாக அவர் கூறினார். கடந்த வாரம், ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வகையில் ஒரு டொலருக்கு எதிராக 204 ரூபாவை எட்டியது. ஆண்டின் தொடக்கத்திலிருந்து நாணய பெறுமதி 7.5% சரிந்துள்ளது. ஒரு கிலோ சீனிக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலையை 125 ரூபாவாக அரசாங்கம் நிர்ணயித்தது. ஆனால் தற்போது தற்போது சீனி ஒரு கிலோ 210 முதல் 220 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கீரி சம்பா ஒரு கிலோ 125 ரூபாயாக விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் அது 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக இலங்கையில் பால்மா, சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டது. ஊடரங்கு உத்தரவுக்கு மத்தியில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர். அந்நியச் செலாவணி இருப்பைப் பேணும் வகையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் ஆடம்பரப் பொருட்களுக்காள இறக்குமதி தடையை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் உள்ள ஒரு சிரேஷ்ட வழக்கறிஞர் தற்போதைய உணவு நெருக்கடிக்கு அரசாங்கமே காரணம் எனத் தெரிவித்தார். இரசாயன உரத்தை திடீரென தடை செய்ய அரசாங்கம் முடிவு செய்தது. இயற்கை உர பாவனையை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. எனினும் விவசாயப் பொருட்களின் குறைந்த அறுவடைக்கு இது வழிவகுத்தது எனவும் அவர் தெரிவித்தார்.



பொருட்களுக்கான தேவை அதிகரித்து, அதேநேரம் உற்பத்தி குறைவடையும்போது பொருட்களை விலை அதிகரிப்பது இயல்பே எனவும் அவர் கூறினார். அவசரகால விதிமுறைகளின் கீழ் வர்த்தகர்கள் பொருட்களைச் சேமித்து வைப்பது ஒரே இரவில் குற்றமாக்கப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினர். இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் எப்பொழுதும் அத்தியாவசியப் பொருட்களை சேமித்து வைத்திருப்பது இயல்பானது. ஆனால், அரசின் இந்த நடவடிக்கை கடுமையானது எனவும் அந்த வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

எனினும், நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஜூலை மாதத்தில் 2.8 பில்லியன் டொலராகக் குறைந்தது. 2020 இறுதியில் இது 5.6 பில்லியன் டொலராக இருந்தது. இதனைச் சுட்டிக்காட்டி இறக்குமதித் தடை அரசால் நியாயப்படுத் தப்படுகிறது. தொற்றுநோயால் பொருட் கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி தடைபட்டதால் இலங்கை பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. நாட்டில் சீனி இறக்குமதிக்கு வருடாந்தம் 40 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

உலகின் சீனி நுகர்வில் இலங்கையர்கள் முதலிடத்தில் உள்ளனர். சராசரியாக இலங்கையில் ஒருவர் ஆண்டுதோறும் 32 கிலோ சீனியை பயன்படுத்துகிறார். வளர்ந்த நாடுகளில் இது நபரொருவருக்கு சராசரியாக 15 கிலோவாகும். அண்டை இந்தியாவில் சராசரி தனிநபர் நுகர்வு 20 கிலோவாகவுள்ளது.

ஆனால் இலங்கையின் சீனி நுகர்வுத் தேவையில் 8% முதல் 10% மட்டுமே உள்நாட்டில் பூர்த்தி செய்யப்படுகிறது. மீதமுள்ளவை இறக்குமதியால் ஈடுசெய்யப்படுகின்றன என்று அரசாங்கத்திற்கு சொந்தமான லங்கா சீனி நிறுவனத்தின் தலைவர் ஜனக நிமலச்சந்திர கூறினார்.

இதற்கிடையில் இலங்கை எதிர்கொண்டுள்ள டொலர் கையிருப்பு நெருக்கடியை சமாளிக்க பொருளாதார விடயங்களில் இராணுவத்தை ஈடுபடுத்தத் துவையில்லை என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

அவசர நிலை பிரகடனத்தால் நாட்டில் முற்று முழுதாக ஜனாதிபதியே ஆட்சியே நடைபெறும் என்பதால் இது சர்வாதிகாரத்துக்கு வித்திடும் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். இதன்மூலம் ஜனாதிபதி தாம் விரும்பிய அவசரகால விதிமுறைகளை வகுக்க முடியும். சட்டமாக்கும் அதிகாரமும் ஜனாதிபதியுடைய கைக்கு சென்றடைந்துள்ளதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் அவர் கூறினார். ■

மூலம் - https://asia.nikkei.com/

-நன்றி: அருவி

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

23. விபரத்தை வாசித்து வினாவுக்கு விடை தருக.

இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஒரு சொல்லாகும்.
முதல் எழுத்து கதையில் உண்டு சதையில் இல்லை.
இரண்டாம் எழுத்து மரத்தில் உண்டு மனத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கம்பியில் உண்டு கப்பியில் இல்லை.

அச்சொல் எது?

(1) கத்தி (2) கனம் (3) கரம்

24. இன்னும் இரண்டு வருடங்களில் ஜீவாவின் வயது பாமாவின் வயதின் இரு மடங்காக இருக்கும். தற்போது பாமாவின் வயது 6 வருடங்கள் எனின், ஜீவாவின் தற்போதைய வயது எத்தனை வருடங்கள் ஆகும்?

(1) 12 (2) 14 (3) 16


25. ஜுலை மாதத்தில் 8 ஆம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 4 (3) 5

26. பெரிய வட்டம் ஒன்றினுள் நான்கு சிறிய வட்டங்களும் ஒவ்வொரு சிறிய வட்டத்தினுள்ளும் அதிலும் சிறிய நான்கு வட்டங்களும் வரையப்பட்டிருந்தன. வட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 20 (3) 21


27. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

28. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டது, அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


29. இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.






(1) (2) (3)

30. பின்வரும் திண்ம உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் அத்திண்ம உருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.



A B C D

(1) ACDB
(2) CADB
(3) CDAB

31. குடும்பம் ஒன்றில் தந்தையும் தாயும் இருப்பதுடன் அவர்களுக்கு மூன்று மகன்மாரும் அவர்களின் மனைவிமாரும் உள்ளனர்.


ஒவ்வொரு மகன்மாருக்கும் இரண்டு மகன்களும் ஒரு மகளும் என்றவாறு உள்ளனர். அக்குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவால் கூடியதாகும்?

(1) 2 (2) 3 (3) 4

32. 61 தொடக்கம் 70 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 6 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

(1) 9 (2) 10 (3) 11

33.



இங்கு காட்டப்பட்டுள்ள உருளை வடிவமுள்ள திண்மத்தை முறிந்த கோடுகள் வழியே வெட்டும் போது கிடைக்கும் செவ்வக வடிவ முகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 6 (3) 8

34. ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) இருள் விலகுதல் ⟶ சூரியன் உதித்தல் ⟶ கண்விழித்தல்
(2) காற்று வீசுதல் ⟶ மழைபெய்தல் ⟶ வானம் இருளுதல்
(3) கடைக்குச் செல்லுதல் ⟶ பொருட்களை வாங்குதல் ⟶ வீடு திரும்புதல்

# அவசரகால சட்டம் மூலம் மக்களை அடக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

## ஜகத் குமார சுமித்ராரச்சி எம்.பி. திட்டவட்டம்



**கொழும்பு, செப். 07**

**போராட்டங்களை ஒடுக்கவும், சமூக ஊடகங்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கவும், அடக்குமுறையான ஆட்சியை முன்னெடுப்பதற்காகவுமே அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.**

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளித்த ஆளுங்கூட்டணியின் தலைமைக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி கூறியதாவது:-

"நல்லாட்சி போன்று மக்களை ஆணைக்குப் புறம்பாக அடக்குமுறை ஆட்சியை முன்னெடுக்கும் தரப்பு எமது அரசு கிடையாது. மக்கள் எம்.சி.சி. உடன்படிக்கை வேண்டாம் என்றனர். அதனை இரத்துச் செய்வோம். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்திலும் எதிர்ப்புகள் வலுத்தன. அதனை நிறுத்தினோம். தன்னிச்சையாகச் செயற்படாமல் மக்களின் கருத்துக்களையும் செவிமடுத்தே அரசு பயணிக்கின்றது.

அத்துடன், எதிரணி உறுப்பினர்களை வேட்டையாடவும், சமூக ஊடகங்களை ஒடுக்கவுமே அவசரகாலச்சட்டம்கொண்டுவரப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். குறிப்பாக நாட்டில் பிரச்னைகள் வலுப்பெற்றால் ஆட்சி தாமாக தனது கைக்கு வந்துவிடும் என்ற நினைப் பிலேயே அவசரகாலச்சட்டம் வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவரும் கருத்து வெளியிடு கின்றார்.

கடந்த காலங்களில் 800 வரையான போராட்டங்கள் இடம்பெற்றன. எந்தவொரு போராட்டத்தையும் வன்முறை ஊடாக அரசு கட்டுப்படுத்தவில்லை. தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியவர்களே சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டனர். ஆக அடக்குமுறைகளைக் கையாள்வதற்காக அவசரகால ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டிய தேவை எமது அரசுக்கு கிடையாது" - என்றார். (இ)




## பிரபல பாடகர் சுனில் பெரேரா காலமானார்!

கொழும்பு, செப். 07

இலங்கையின் பிரபல பாடகரும் ஜிப்சிஸ் குழுவின் தலைவருமான சுனில் பெரேரா (வயது 69) நேற்றுக் காலை காலமானார்.

நிமோனியா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில்அவர்காலமானார்.

கடந்த மாதம் சுனில் பெரேராவுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது. எனினும், சிகிச்சையின் பின்னர் அவர், வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்த நிலையில் நிமோனியா காரணமாக நேற்றுமுன்தினம் மீண்டும் சேர்க்கப்பட்டார்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல பாடல்களை சுனில் பெரேரா பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நான்கு மாதங்களுக்குரிய சீனி கையிருப்பில் உண்டு

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

கொழும்பு, செப். 07

"நான்கு மாதங்களுக்குத் தேவையான சீனி கையிருப்பில் உள்ளது. எனவே, சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என எவரும் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.



நாட்டில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் போன்று சீனி வாங்கவும் மக்களுக்கு வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் கருத்துக்குப் பதில் வழங்கும் விதத்திலேயே இராஜாங்க அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில்அவர்மேலும் கூறியதாவது:-

"நாட்டில்எவ்வித தட்டுப்பாடுமின்றி தொடர்ச்சியாக நான்கு மாதங்களுக்கு வழங்கக்கூடிய அளவுக்கு சீனி கையிருப்பில் உள்ளது. எதிரணிகள் கூறுவது போல் தட்டுப்பாடு ஏற்படவில்லை. மக்களுக்குத் தட்டுப்பாடின்றி சீனியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயத்தில் எவரும் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை" - என்றார்.

இதேவேளை, சீனி மாபியாக்களை இந்த அரசே பாதுகாக்கின்றது எனவும், வரி விலக்கை வழங்கிவிட்டு, இன்று ஊடக கண்காட்சிக்காகச்சுற்றிவளைப்புகள்மேற்கொள்ளப்படுகின்றன எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ)



# பரீட்சைகள் நடத்த உத்தேச திகதிகள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 07

கொரோனா நெருக்கடியால் பிற்போடப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரம், சாதாரண தரம், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளை நடத்துவதற்கான முன்மொழியப்பட்ட உத்தேச திகதிகளை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எம்.டி. தர்மசேன இதனைத் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளை எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளை நவம்பர் 15 முதல் டிசம்பர் 10 வரை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகளை 2022 ஆண்டு பெப்ரவரி 21 முதல் மார்ச் 03 வரை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவை முன்னாள் கல்வி அமைச்சரின் அறிவுரையின் கீழ் முன்மொழியப்பட்ட திகதிகள் என்றும், இந்தத் திகதிகளில் கோரிக்கைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பரிசீலித்த பின்னர் இதில் மாற்றம் ஏற்பலாம் என்றும் அவர் கூறினார்.

மேலும் இது தான் இறுதியான திகதி என்று உறுதியாகக் குறிப்பிட முடியாது என்றும், இவை முன்மொழியப்பட்ட உத்தேசி திகதிகள் என்றும் அவர் குறிப்பிட்டார். (இ)

# மேலும் ஒரு இலட்சம் பைசர் தடுப்பூசிகள் அமெரிக்காவிலிருந்து நேற்று நாட்டுக்கு

கொழும்பு, செப். 07

அமெரிக்காவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேலும் தொகை 'பைசர்' தடுப்பூசிகள் நேற்று இலங்கை வந்துள்ளன.

அதன்படி, ஒரு இலட்சம் பைசர் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவை பாதுகாப்பாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

ஏற்கனவே 8 இலட்சம் வரையான பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்துள்ளன.

இதேவேளை, நேற்று முதல் நாட்டில் 20 முதல் 29 வயதுக்கு இடைப்பட்டோருக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசிகளே வழங்கப்படுகின்றன. (இ)

# வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளருக்கு கொரோனா



வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஸுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. அவரின் உடல் நிலையில் மாற்றம் உணரப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு அன்ரிஜென்பரிசோதனைமேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனையில் அவர் கொரோனாத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்தநிலையில் அவர் குடும்பத்துடன் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (இ - 03)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 66 ஆயிரம் பேர் கைது!

கொழும்பு, செப். 07

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகைள மீறிய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் 273 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர். என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 53 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறை களை மீறிய குற்றச்சாட்டில் 66 ஆயி ரத்து 3 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# நோயுற்றுள்ள பூமிக்கு தடுப்பூசி கிடையாது!

## உலக பல்லுயிர் மாநாட்டில் மக்ரோன்

மார்செய், செப். 07

உலகம் பல்லுயிர்த் தன்மையை மிக வேகமாக இழந்துவருகின்ற நிலையில் உயிரின் பல்வகைமை தொடர்பான உலகளாவிய உச்சி மாநாடு பிரான்ஸின் மார்செய் நகரில் தொடங்கியது. கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலத்துக் குப் பின்பு சூழல் மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்புத் தொடர்பாக நடத்தப்படுகின்ற மிக முக்கியமான மாநாடு இதுவாகும்.

மத்தியதரைக் கடல் துறைமுக நகரமான மார்செய்யில் வெள்ளியன்று தொடங்கிய இந்த மாநாட்டில் உலகெங்கும் இருந்து ஆயிரக் கணக்கான அறிவியலாளர்கள், சூழல் பாதுகாப்பு நிபுணர்கள் மற்



றும் அதிகாரிகள் நேரிலும் நேரலை வழியிலும் கலந்துகொண்டு பல்லுயிர் பாதுகாப்புத் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவுள்ளனர்.

மாநாட்டில் தொடக்கவுரை நிகழ்த்திய பிரெஞ்சு அதிபர் மக்ரோன், "பூமியின் நோய்க்குத் தடுப்பூசி எதுவும் கிடையாது" என்று தெரிவித்தார். பூச்சி கொல்லிப் பயன்பாடுகளையும் பிளாஸ்ரிக் மாசுக்களையும் நிறுத்துதல், மழைக் காடுகளின்அழிப்புக்குக் காரணமான மூலப் பொருள்களைக் கண்டறிந்து இல்லாமல் செய்தல் போன்ற அவசரப் பணிகளை விவரித்தார்.

உலகம் அதன் இலக்குகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இயற்கைக்கு நிதி அர்ப்பணிப்புகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும். பூமியின் துருவப் பகுதிப் பிராந்தியங்களை உலகின் பொதுச் சொத்தாக அங்கீகரிக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)



## கினியா நாட்டின் ஆட்சியை கைப்பற்றியது இராணுவம்!

கோனக்ரி, செப். 07

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் இராணுவப் புரட்சி மூலம் அந்நாட்டு இராணுவ விசேட படையணி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அத்துடன், கினியா ஜனாதிபதி அல்பா கொண்டே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கினியா தலைநகர் கோனக்ரியில் உள்ள ஜனாதிபதி மாளிகை அருகே நேற்றுமுன்தினம் பரவலான துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் பல மணி நேரம் தொடர்ந்து கேட்டது. இதையடுத்து, அரச தொலைக்காட்சியை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. தொடர்ந்து தொலைக்காட்சியில் பேசிய இராணுவ உயர் மட்டத் தலைவர் மமாடி டம்போயா, ஜனாதிபதி அல்பா கொண்டே தலைமையிலான அரசு கலைக்கப்பட்டதாக அறிவித்தார்.

அரசாங்கத்தை ஒரு தனி நபரிடம் ஒப்படைக்க இனியும் தாங்கள் விரும்பவில்லை. அரசாங்கத்தை இனி மக்களே வழிநடத்துவார்கள். நாட்டைக் காப்பற்ற வேண்டியது ஒவ்வோர் இராணுவ வீரனின் கடமை என அவர் குறிப்பிட்டார்.

எனினும், இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஜனாதிபதி அல்பா கொண்டே எங்கிருக்கிறார்? அவரின் நிலைமை என்ன? என்பது குறித்த எந்தக் கருத்துக்களையும் அவர் வெளியிடவில்லை.

இதேவேளை, சதிப் புரட்சி மூலம் ஆட்சியைக் கவிழ்த்த கினியா இராணுவத்தின் இந்த செயல்பாட்டை ஐ. நா. கண்டித்துள்ளது. "துப்பாக்கியின் பலத்தால் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆப்பிரிக்க நாடான கினியா, பிரான்ஸிடம் இருந்து 1958ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. அந்த நாட்டில் கடந்த 2010ஆம் ஆண்டு ஜனநாயக முறைப்படி நடைபெற்ற முதல் தேர்தலில் அல்பா கொண்டே வெற்றி பெற்று ஜனாதிபதியானார். 3ஆவது முறையாக கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பிரிட்டன் பாராளுமன்றத்தில் ஜீன்ஸ், ரீ சேர்ட் அணிய தடை!

லண்டன், செப். 07

பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜீன்ஸ், ரீ-சேர்ட் போன்ற ஆடைகளை அணிந்துவரக்கூடாது. தொழில்முறை ரீதியான மரியாதைக்குரிய விதத்தி லான ஆடைகளை அணிய வேண்டும் என்று கீழவை தலைவர் சேர் லிண்ட்ஸீ ஹோயல் வலியுறுத்தினார்.

நேற்று முதல் இந்த ஆடை கட்டுப்பாடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நடைமுறைக்கு வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் அணிந்து வரும் ஆடைகள், தங்களின் தொகுதி மீது அவர்கள் வைத்திருக்கும் மரியாதையை வெளிப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். எனவே, தொழில் முறையிலான ஆடைகளை மட்டுமே அவர்கள் அணிந்து வர வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## தாய்வான் வான் எல்லைக்குள் சீனாவின் போர் விமானங்கள்!

தைபே, செப். 06

சீனாவின் 19 இராணுவ போர் விமானங்கள் மற்றும் அணு ஆயுதத் திறன் கொண்ட விமானங்கள் தமது வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்து வெளியேறின என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்வானை அச்சுறுத்தும் வகையில் சீனாவின் இராணுவ விமானங்கள் தாய்வானுக்குள் அடிக்கடி நுழைந்து வெளியேறுகின்றது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு தாய்வான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றபோதும் சீனா அதனைக் கண்டு கொள்ளவில்லை.

தாய்வானை சீனாவின் ஆளுகைக்குள் உள்ள ஒரு பகுதியென சீனா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், இதனை ஏற்க மறுத்து தாங்கள் ஓர் இறையாண்மை கொண்ட சுயாதீன தனியரசு என தாய்வான் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் மீண்டும் ஒரு சீண்டல் நடவடிக்கையாக சீன விமானப் படையின் 19 போர் விமானங்கள் தமது வான் பரப்பில் பறந்தன என்று தாய்வான் கூறியுள்ளது. (ஐ)

## பஞ்ஷீர் போராளிகள் போரில் பின்னடைவு!

### தலிபான்களுடன் பேச சம்மதம்

காபூல், செப். 06

ஆப்கானிஸ்தான் - தலைநகர் காபூலுக்கு அருகே பஞ்ஷீர் பள்ளத்தாக்கில் தலிபான்களிடம் சரணடைய மறுத்து சண்டையிட்டுவரும் பஞ்ஷீர் போராளிகள் பின்னடைவை சந்தித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கடந்த 15ஆம் திகதி முழுமையாகக் கைப்பற்றினர். அத்துடன், ஆகஸ்ட் 31ஆம் திகதி அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுப் படைகள் அங்கிருந்து முழுமையாக வெளியேறின.

இந்த நிலையில் பஞ்ஷீரைக் கைப்பற்றும் நோக்கில் தலிபான்கள் கடும் சண்டையிட்டு வருகின்றனர். பஞ்ஷீர் பள்ளத்தாக்கு தலிபான்களால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, போரில் பலத்த சேதம் ஏற்பட்டதையடுத்து போரை நிறுத்திக்கொள்வதாக எதிர்ப்புக் குழுவினர் அறிவித்துள்ளனர். அதேநேரம் பேச்சுக்கு தயாராக இருப்பதாகவும், பஞ்ஷீரில் இருந்து தலிபான்கள் வெளியேற வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர் என்றும் கூறப்பட்டது.

இதனிடையே, ஆப்கானிஸ்தானின் பஞ்ஷீர் பள்ளத்தாக்கில் தலிபான்களால் பேரழிவு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஐ. நா.விடம் ஆப்கானிஸ்தான் முன்னாள் துணை ஜனாதிபதி அமருல்லா சலே வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## ஆப்கானினில் புதிய அரசு விரைவில் அறிவிக்கப்படும்!

### மோதல் எதுவும் இல்லை என்கிறது தலிபான்

காபூல், செப். 07

ஆப்கானிஸ்தானில் புதிய அரசு அமைப்பது பற்றி விரைவில் அறிவிப்பு வெளியாகும் என தலிபான்கள் அறிவித்துள்ளனர். புதிய அரசு அமைப்பதில் தங்களுக்குள் எந்தவித மோதலும் இல்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் புதிய அரசு அமைப்பது தொடர்பாக தலிபான்கள் அமைப்பின் துணைத் தலைவரான முல்லா அப்துல் கனி பரதர் பேச்சை தொடங்கியுள்ளார். தலைநகர் காபூலில் முக்கிய தலைவர்களை சந்தித்து பேசி வருவதாக தெரிகிறது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய நிலையில், அங்கு தலிபான் தீவிரவாதிகளுக்கும், அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வந்தது. இதில், ஆப்கானிஸ்தானின் முக்கிய பகுதிகளைத் தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் தலைநகர் காபூலையும் கைப்பற்றினர். தற்போது தலிபான்கள் ஆப்கனைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தலிபான்கள் அமைப்பின் துணைத் தலைவரான முல்லா அப்துல் கனி பராதர் ஆப்கனின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்படவுள்ளார் என்று தகவல் வெளியாகி இருந்தது.

இதற்கான தலிபான்களின் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினரில் புதிய அரசு எப்படி அமைய வேண்டும், அதில் யார் யார் நிர்வாகிகளாக இருக்க வேண்டும் என்பது போன்ற அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடந்து வந்தது.

இந்தநிலையில் ஆப்கானிஸ்தானில் புதிய அரசு அமைப்பது பற்றி விரைவில் அறிவிப்பு வெளியாகும் என தலிபான்கள் அறிவித்துள்ளனர். தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் செய்தியாளர் சந்திப்பில் இதுகுறித்து கூறியதாவது:

ஆட்சி அமைப்பதில் தாமதம் ஏதும் ஏற்படவில்லை. கடுமையான மோதல் இருப்பதாக சிலர் கூறுவது தவறானது. கருத்து வேறுபாடுகள் ஏதுமில்லை. பேச்சு முடிந்து விட்டது. சில தொழில்நுட்ப விஷயங்கள் மட்டுமே மீதமுள்ளன.

புதிய ஆப்கானிஸ்தான் அரசு எதிர்காலத்தில் மாற்றங்களை நோக்கி நடைபோடும். இறுதி முடிவுகள் விரைவில் எடுக்கப்படவுள்ளன. தொழில்நுட்பம் சார்ந்த சில சிக்கல்கள் தீர்க்கப்பட்டவுடன் புதிய அரசு குறித்து விரைவில் அறிவிப்போம்- என்றார். (ஐ)

# இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் சமநிலை நோக்கி!

லண்டன், செப். 07

இந்தியா - இங்கிலாந்து நான்காவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடையும் வாய்ப்பை நோக்கி நகர்ந்து வருகின்றது. (நேற்று மதிய போசன இடைவேளை வரை)

இந்திய அணி இங்கிலாந்தில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. 1 - 1 என்று தொடர் சமநிலையில் இருக்கும் நிலையில், நான்காவது போட்டி கடந்த வியாழக்கிழமை லண்டன் ஓவலில் தொடங்கியது.

முதல் இனிங்ஸில் இந்திய அணி 191 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு முதல் இனிங்ஸில் ஆடிய இங்கிலாந்து 290 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்த நிலையில் இரண்டாவது இனிங்ஸில் இந்திய அணி 466 ஓட்டங்களை குவித்தது. இதில், ரோஹித் சர்மா 127, புஜாரா 61, தாகூர் 60, ரிஷப் பந்த் 50 ஓட்டங்களை சேர்த்திருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் வோக்ஸ் 3 விக்கெட்களையும், ரொபின்சன், மொயீன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தனர்.



368 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க வீரர்கள் சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தனர். 77 ஓட்டங்களை அந்த அணி பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டம் முடிவடைந்தது.

இறுதிநாளான நேற்று ஆட்டம் தொடர்ந்த நிலையில், ரொறி பேர்ண்ஸ் 50 ஓட்டங்களைப் பெற்றுஆட்டமிழந்தார்.

நேற்று மதிய போசனத்திற்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது இங்கிலாந்து அணி 2 விக் கெட்கள் இழப்புக்கு 131 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹமீத் 62, ரூட் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். (ஐ)



அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்:

## 18 வயதான லேலா காலிறுதி சுற்றில்!

நியூயோர்க், செப். 07

கனடாவின் இளம் வீராங்கனையான லேலா பெர்னாண்டஸ் காலிறுதி போட்டிக்கு முதன்முறையாக முன்னேறினார். 2016 அமெரிக்க ஓப்பன் சம்பியனான முன்னணி வீராங்கனையான ஏஞ்சலிக் கெர்பரை வீழ்த்தியே அவர் காலிறுதி போட்டிக்கு முன்னேறினார்.

நியூயோர்க்கில் கிராண்ட்ஸ்லம் அந்தஸ்துபெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நான்காவது சுற்றில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரை கனடாவின் 18 வயதான லேலா பெர்னாண்டஸ் எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் 4 -6, 7 - 6 (7-5), 6 - 2 என்ற செற் கணக்கில் லேலோ வெற்றி பெற்றார்.

இவர் காலிறுதி போட்டியில் உக்ரைனின் எலைனா ஸ்விற்ரோலினாவை எதிர்கொள்ளவுள்ளார்.

தரவரிசையில் 73ஆவது இடத்திலுள்ள முன்னதாக மூன்றாவது சுற்றில் மற்றோர் முன்னணி வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒசாகாவையும் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நியூசிலாந்து அணியிடம் வீழ்ந்தது பங்களாதேஷ்!

டாக்கா, செப். 07

பங்களாதேஷ் அணியை 76 ஓட்டங்களுக்கு சுருட்டி 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றது நியூசிலாந்து.

பங்களாதேஷ் சென்றுள்ள நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது. முதல் இரு போட்டிகளிலும் பங்களாதேஷ் வென்ற நிலையில், நேற்றுமுன்தினம் மூன்றாவது போட்டியில் இரு அணிகளும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.
நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 128 ஓட்டங்களை அந்த அணி சேர்த்தது. இதில், ஹென்றி நிக்கோலஸ் 36 ஓட்டங்களையும், ரொம் பிளெண்டல் 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

129 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 19.4 ஓவர்களில் 76 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து தோல்வியடைந்தது.

முஸ்பிஹூர் ரஹீம் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் அஜாஸ் பட்டேல் 4, கோல் மக்கொன்சி 3 விக்கெடகளை கைப்பற்றினர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் 2 - 1 என்ற கணக்கில் பங்களாதேஷ் முன்னிலையில் உள்ளது. (ஐ)





அமெரிக்க ஓப்பன்:

## சிமோனாவும் தோல்வி!

நியூயோர்க், செப். 07

உலகின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான சிமோனா ஹாலேப்பும் அமெரிக்க ஓப்பனில் தோற்று வெளியேறினார்.

நியூயோர்க்கில் கிராண்ட்ஸ்லம் அந்தஸ்துபெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில், நேற்று முன்தினம் நடந்த நான்காவது சுற்றுப் போட்டியில் உக்ரைனின் எலைனா ஸ்விற்ரோலினாவும் ருமேனியானவின் சிமோனா ஹாலேப்பும் மோதினர்.

ஆரம்பம் முதலே போட்டியில் ஆதிக்கம் செலுத்திய எலைனா 6 - 3, 6 - 3 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

ரி-20 உலகக் கிண்ணம்:

## பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது!

இஸ்லாமாபாத், செப். 07

இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

பாபர் அஸாம் தலைமையிலான 15 பேர் கொண்ட அணியில், தொடக்க வீரரான ஷர்ஜில் கான் இடம்பெறவில்லை. அத்துடன், சொஹைப் மாலிக், சர்பராஸ் அஹமட், வஹாப் ரியாஸ் போன்ற அனுபவ வீரர்களுக்கும் அணியில் இடம்கிடைக்கவில்லை.

எனினும், ஆசிப் அலி, குஷ்தில் ஷா ஆகியோருக்கு உலகக் கிண்ணத் தொடரிலும், நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான இருபது - 20 தொடர்களிலும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஷர்ஜில் கான் தொடர்ச்சியாக மிகக் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வருகின்றார். இந்த நிலையிலேயே அவருக்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாக பாகிஸ்தான் அணி வரும் 25ஆம் திகதி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிராகவும், ஒக்ரோபர் 13, 14ஆம் திகதிகளில் இரு போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிராகவும் விளையாடவுள்ளது.

அணி விவரம், பாபர் அஸாம், ஷதாப் கான், முகமது ரிஸ்வான், ஆசிப் அலி, சொஹைப் மக்சூட், அஸாம் கான், குஷ்தில் ஷா, முஹமது ஹபீஸ், முகமது வாசிம் ஜூனியர், ஷாஹீன் அப்ரிடி, ஹாரிஸ் ராப், ஹசன் அலி, இமாத் வாசிம், முகமது ஹூஸ்னைன், உஸ்மான் காதர், ஷாநவாஸ் தானி, ஃபகார் ஸமான். (ஐ)



# மைத்துனர்கள் மோதல் ஒருவர் வெட்டிக்கொலை

## மற்றவர் வைத்தியசாலையில்

கொழும்பு, செப். 07

குருவிட்ட, தெப்பனாவ - கலுகெலே பிரதேசத்தில் அதிக மதுபோதையில் இருந்த மைத்துனர் உறவுமுறையுடைய இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில், ஒருவர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார். அத்துடன் மற்றவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தெப்பனாவ - கலுகெலே பிரதேசத்தைச் சேர்ந்த ஹந்தகலகே விக்ரமத்ன (வயது 53) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

சமந்த சிசிரகுமார (வயது 33) என்பவர் படுகாயமடைந்த நிலையில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம் பவம் தொடர்பில் குருவிட்ட பொலஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மரண அறிவித்தல்



## தம்பிஜயா வாசன் (நல்லைவாசன்)

(புங்குடுதீவு - கனடா)

**மலர்வு**
**08 - 02 -1962**

**உதிர்வு**
**01 - 09 - 2021**

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா வாசன் 01.09.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா – தனபாக்கியலட்சுமி தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிதேவி அவர்களின் அன்புக் கணவரும், முரளிகாந் (சுவிஸ்), விஜயகாந் (ஐசன் – சுவிஸ்), ஆதித்தன், ஆர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், லட்சிகா (சுவிஸ்), அச்சுதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, ஆனந்தமூர்த்தி, கிருபானந்தமூர்த்தி, சுந்தரமூர்த்தி மற்றும் மணிமேகலை, கிருஸ்ணமூர்த்தி, கண்ணகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் கமலாம்பிகை, மனோரஞ்சிதம், புவனேஸ்வரி, நாகபூபதி, கமலாநேரு, வசந்தமலர், கனகலிங்கம், கமலா, சந்திரா, சோமஸ்கந்தராசா, சறோஜினி, மகேந்திரராஜா, குலேந்திரராஜா(சிவன்), சாந்தி, மதி, தவம், குமார் ஆகியோரின் அன்புமைத்துனரும், சத்தியா(சுவிஸ்), சித்திரா(சுவிஸ்), வெற்றி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 07 Sep 2021 6:00 PM - 9:00 PM
Wednesday, 08 Sep 2021 10:00 AM - 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம்
Wednesday, 08 Sep 2021 12:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue,Gormley, Ontario, L0H 1G0, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கிருஸ்ணமூர்த்தி**
(சகோதரன்).

தொடர்புகளுக்கு :
**ஆர்த்தி (மகள்) - 0016478715039**
**கனகசிங்கம் (மருமகன்) - 0016478545939**
**மகேந்திரன் (மச்சான்) - 0014372424249**
**கிருஸ்ணமூர்த்தி (கிட்டு - சகோதரன்) - 0775473085**
**முரளிகாந் (மகன்) - 0041794479995**

# 24 இலட்சம் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

## வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணி

**கொழும்பு, செப்.07**

**வருமானத்தை இழந்தவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கும் திட்டம் நூறு வீதம் பூர்த்தி யடைந்துள்ளது எனப் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்தது.**

இந்தக் கொடுப்பனவு 24 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் செயலணி குறிப்பிட்டது.

எவ்வாறாயினும், வருமானத்தை இழந்தவர்கள் எவருக்கேனும் 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு கிடைக்காவிட்டால் முறையீடு செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது.தமது முறையீட்டை மாவட்ட அரச அதிபர்கள் அல் லது பிரதேச செயலாளர்களி டம் சமர்ப்பிக்குமாறும் செயலணி அறிவித்துள்ளது. (இ)

# கொரோனாவால் மூன்றரை வயது குழந்தை மரணம்

அம்பலாங்கொடை, செப். 07

அம்பலாங்கொடை, தேவகொட பிரதேசத்தைச் சேர்ந்த மூன்றரை வயது பெண் குழந்தை ஒன்று கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தது.

குறித்த குழந்தை லியுகேமியா நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே கொரோனாத் தொற்றுக்கும் உள்ளாகியுள்ளது.

குழந்தையின் இறுதிக் கிரியைகள் காலி, தடெல்ல தகனசாலையில் இடம்பெற்றுள்ளது. (இ)

## சிறுமி ஹிஷாலினி மர்ம மரணம்:

# ரிஷாத்துக்கும் மனைவிக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல்!

கொழும்பு, செப். 07

மலையகச் சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பான வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், அவரது மனைவி மற்றும் மாமனார் ஆகியோரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த ஹிஷாலினி என்ற 16 வயது சிறுமி எரிகாயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் மற்றும் சிறுமியை பணிக்கமர்த்திய தரகர் ஆகிய இருவரும் பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஊரடங்கு சட்டவிதிகளை மீறி நிதி உதவி வழங்கிய மூவர் கைது



வடமராட்சி, செப். 07

தனிமைப்படுத்தல் ஊரடங்கு விதிமுறைகளை மீறி அதிகளவான மக்களை அழைத்து பண உதவி வழங்கிய குற்றச்சாட்டில் மூவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர்.

நேற்று முற்பகல் வதிரி, இரும்பு மதவடியில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இந்தப் பண உதவி வழங்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்ட நிலையில் நூற்றுக்கணக்கானோர் வரிசையில் திரண் டனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்த நெல்லியடிப் பொலிஸார், அங்கு சென்று பண உதவி வழங்கியவர் உட்பட மூவரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். (இ, 02)

# மேலும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ‘ஸ்புட்னிக் - V’ தடுப்பூசிகள் வரும்

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தகவல்

கொழும்பு, செப். 07

“செப்ரெம்பர் மாதத்துக்குள் மேலும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் “ஸ்புட்னிக் - V” தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்படும் என ரஷ்ய நிறுவனம் உறுதியளித்துள்ளது.”

- இவ்வாறு மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“சீனாவிடமிருந்து மேலும் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன்படி இது வரையில் 2 கோடி 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. ஒரு கோடி பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதில் 73 இலட்சம் பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட் டுள்ளன.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் ஒன்றரை இலட்சம் பேருக்கு “ஸ்புட்னிக் - V” தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவர்களில் 30 ஆயிரம் பேருக்கு இரண்டாவது டோசும் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய



தொகை எப்போது வழங்கப்படும் என ரஷ்ய நிறுவனத்திடம் கேட்டுள்ளோம். செப்ரெம்பர் மாதத்துக்குள் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் “ஸ்புட்னிக் - V” தடுப்பூசிகள் வழங்கப்படும் எனத் தெரியப் படுத்தப்பட்டுள்ளது” - என்றார். (இ)

## உரிமைகளை...

கால சட்டத்தை பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்தார். எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டுவது போல் மக்களின் அடிப்படை உரிமைகளை அடக்கும் விடயங்கள் எதுவும் அவசரகால சட்டத்தில் இல்லை. என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஜனாதிபதி வெளியிட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் சரத்துகள் என்னவென்று தெரியாமல் எதிரணி பொய்க்குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்பான சரத்தை நாடுமுழுவதும் செயல்படுத்தி நியாய விலையில் பொருட்களை விநியோகிக்கவே அவர் இதனை வெளியிட்டுள்ளார்.அதனை செய்ய வேண்டாமென்றா எதிரணி கோருகிறது? இந்த சட்டத்தை பயன்படுத்தி மக்களின் உரிமைகளை தடுக்க முயல்வதாக எதிரணியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த சட்டத்தில் அவ்வாறு ஏதாவது உள்ளதா? ஜனாதிபதியின் அறிவிப்பை தெளிவாக வாசிக்காமலே குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர்.

டொலரை கட்டுப்படுத்துமாறும் சம்பளத்தை அதிகரிக்குமாறும் ஆசிரியர் சம்பள பிரச்னை தீர்க்குமாறும் சகலருக்கும் தடுப்பூசி வழங்குமாறும் எதிரணி கோருகிறது. ஏனைய நாடுகளை போன்று இந்த தொற்று நிலையில் இருந்து மீள எதிரணி ஒத்துழைக்க வேண்டும். அரசிற்கு வருமானம் கிடைக்கும் 3 வழிகள் உள்ளன. சுற்றுலா பயணிகளின் வருகை மூலம் 500 கோடி ரூபா வருமானம் கிடைத்தது. அது இன்று பூச்சியமாக மாறியுள்ளது. எதிரணி ஆட்சிக்கு வந்தால் இதனை மாற்ற முடியுமா? அந்நிய செலாவணி குறைந்துள்ளது. உள்நாட்டில் வருமானம் கிடைக்கும் கலால் வரி, வருமான வரி, சுங்க இறக்குமதி வரி என்பனவும் பெருமளவு குறைந்துள்ளது.

இவற்றை அறிந்து கொண்டு 28 வருடங்களாக தீர்க்கப்படாத ஆசிரியர் பிரச்னையை தீர்க்குமாறு கேட்கின்றனர். இதனை ஒரே இரவில் தீர்க்க முடியுமா? கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதால் பிள்ளைகள் பெரும் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். ஒன்லைன் முறையில் இருந்தும் ஆசிரியர்கள் விலகியுள்ளனர். இதனை எதிரணி அரசை அபகீர்த்திக்குட்படுத்த முயலக் கூடாது.

மேலும் ஜனாதிபதியின் அறிவிப்பின் முதலாவது பகுதியில் பொருட்கள் பதுக்கி வைத்திருந்தால் அவற்றை கைப்பற்றி நியாயமான விலைக்கு விற்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.இதனால் பாவனையாளர்கள் தான் நன்மை அடைவர். இதனை பயன்படுத்தி எவ்வாறு வேறு நோக்கங்களை நிறைவேற்ற முடியும்?

நுகர்வோர் அதிகார சபையின் வாயிலாக இவற்றை செய்ய முடியாதா என கேட்கின்றனர். ஆனால் உத்தரவாத விலை நிர்ணயித்து அதிக விலைக்கு விற்றால் வழக்கு தொடர மட்டுமே இதனால் முடியும். ஆனால், நடைமுறையில் இருக்கும் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது.

நாட்டின் மொத்த உள்நாட்டு தேவையில் 18 வீதம் தான் இங்கு உற்பத்தியாகிறது. 82 வீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதனை வியாபாரிகள் பயன்படுத்தி மக்களை சூறையாடுகின்றனர். இதனை கட்டுப்படுத்தவே ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்தார் என்றார்.

## அவசரகால...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெற்றது.

இந்நிலையில் அவசரகால சட்டத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் எம்.பி.யுமான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரினார். இதனையடுத்து இலத்திரனியல் முறை வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதன் போது அவசரகால சட்டத்துக்கு ஆதரவாக அரச தரப்பினர் வாக்களித்த அதே வேளை எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு. ஜே.வி.பி. ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பி. முஷாரப் அரச தரப்புடன் இணைந்து ஆதரவாகவே வாக்களித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிராக வாக்களித்த நிலையில் அவர் கட்சியின் ஏனைய எம்.பி.க்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸ, தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றவும் இல்லை. வாக்களிப்பில் பங்கேற்கவும் இல்லை.

## இணைய வழியில்...

தினை நான் குறித்த பேரவையில் சமர்பிக்கவுள்ளேன்" என அமைச்சர் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு, பத்தரமுல்லையில் பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்தத் தகவல்களை பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நான் பங்கேற்கவுள்ளேன். இணையவழி ஊடாக இதில் கலந்துகொள்வேன்.

கடந்த மார்ச் மாதத்தில் பேரவையின் முன்னைய அமர்வு நடந்தது. அதன்பின்னர் கடந்த ஆறு மாதங்களாக பெரும் சிரமங்கள் ஏற்பட்டன. கோவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் எமது நாட்டின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றிய யதார்த்தமான கருத்தினை நான் குறித்த பேரவையில் சமர்பிக்கவுள்ளேன்.சர்வதேச ரீதியில் தீவிரவாதம் மற்றும் அதன் தாக்கம் என்பது தெளிவான அறிவை அனைத்து நாடுகளும் அறிந்துள்ளன. தீவிரவாத செயல்பாட்டினால் தென்னாசிய நாடுகள் மட்டுமன்றி உலக நாடுகளையும் அழுத்தத்திற்கு இட்டுச்சென்றுள்ளன.

அண்மையில் நியூசிலாந்தில் நடந்த கவலைக்குரிய சம்பவம் இதற்கு உதாரணமாகும். இதுபற்றி ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய எமது அனைத்து புலனாய்வுப் பிரிவும் நியூசிலாந்தினால் நடத்தப்படுகின்ற விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது பிரித்தானியாவினால் விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு நீடிக்கப்பட்டமையிட்டு நாங்கள் நன்றி கூறுகின்றோம். தொடர்ச்சியாக அந்த தடையை நீக்கும்படி பல சக்திகள் கோரிக்கை விடுத்துவந்த போதிலும் பிரித்தானிய நீதிமன்றம் அந்தக் கோரிக்கையை நிராகரித்து வருகின்றது. போர் முடிந்த போதிலும் அரசியல் ரீதியிலான செயல்பாடு காரணமாக நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ள காரணமாகவே பிரித்தானியா இந்த தீர்மானத்தை எடுத்திருக்கின்றது என நினைக்கின்றோம். இந்த முடிவானது ஏனைய நாடுகளுக்கும் மிகச்சிறந்த உதாரணமாகும்" எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

## இன்னோர்...

டும் ஓர் ஆவணம் அனுப்பப்படும் என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகின்றது. தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை விளக்கும் விதமாக தமிழ்த் தேசியக் கட்சிகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அம்மையாருக்கு ஆவணங்களை அனுப்பி வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகள், கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து ஆவணம் ஒன்றை அனுப்பியது. இந்த நிலையில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஆவணம் தொடர்பில் கட்சிக்குள் முரண்பாடுகள் எழுந்த நிலையில், அது தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியினர் நேற்று பாராளுமன்ற அலுவலகத்தில் கூடிப் பேசுவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பேசவல்ல சுமந்திரன் எம்.பியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு இன்று (நேற்று) இடம்பெறவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் வேறொரு கட்சியுடன் கையொப்பமிட்டு ஆவணம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆவணம் ஒன்றைத் தயாரிக்கிறார் என்று அறிந்திருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் இவ்வாறு செய்துள்ளனர்.

"நாங்கள் இன்னோர் ஆவணத்தை அனுப்புவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரு அங்கங்களாக - பிரிந்து செல்வதாகத் தென்படலாம். இதனால், தலைவர் சம்பந்தன் கையொப்பமிட்ட ஆவணத்தை மட்டுமே அனுப்புகிறோம். இந்தக் கடிதத்தையே அனுப்புமாறே நேற்று (நேற்று முன்தினம்) கூடிய இலங்கை தமிழ் அரசு கட்சி அரசியல் குழுவும் கூறியது." - என்றார். (ஐ)

## யாழில் கணவன்...

சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 87 வயதான மனைவி கடந்த வாரம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மின் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 97வயதுடைய அவரது கணவர் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (இ - 03)

## நேற்று 3,173...

தார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் நாட்டில் இதுவரை மொத்தமாக 4 இலட்சத்து 65 ஆயிரத்து 940 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் மேலும் 1,952 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை மொத்தமாக 3 இலட்சத்து 86 ஆயிரத்து 509 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். (இ)

## அவசரகால சட்ட...

யிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

"நாட்டுக்குத் தற்போது அவசரகால நிலை அவசியமில்லை. உயிர்களைக் காப்பாற்ற வேண்டியதே அவசியம்.

பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த அவசரகால நிலை தேவையில்லை. அதற்குப் பதிலாக 2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நுகர்வோர் விவகார ஆணைக்குழு சட்டமும், அதிகார சபையும் அந்த நோக்கத்துக்காக இருக்கின்றன.

அரசு நுகர்வோர் விவகார சட்டத்தை நண்பர்களுக்கு நிவாரணம் வழங்கப் பயன்படுத்துகின்றது. பொதுமக்கள் அத்தகைய ஓர் ஆட்சியை விரும்பவில்லை.

கொரோனாத் தொற்றுநோய் ஒரு தேசிய அனர்த்தம் என்பதோடு இவ்வாறான அனர்த்தங்களின்போது 2005ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் செயல்பட அதிகாரம் உள்ளது.

அதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை ஒன்றை ஸ்தாபிக்க முடியும். எனினும், ஜனாதிபதி இன்னும் அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி அவசரகால விதிமுறைகளைக் கடுமையாக எதிர்க்கின்றது. மக்களின் ஜனநாயகத்தின் மீது இத்தகைய தாக்குதலை மேற்கொள்ள அரசு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் தோற்கடிப்போம்" - என்றுள்ளது. (இ)

## கொரோனா...

அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 180 பேரில் 97 ஆண்களும், 83 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதில் 05 ஆண்கள், 02 பெண்கள் 07 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 24 ஆண்கள், 16 பெண்கள் என 40 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 133 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 68 ஆண்களும், 65 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## யாழ்ப்பாணத்தில்...

உறுதிப்படுத்தப்பட்டது.

அன்ரிஜென், பி. சி. ஆர்.அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட செயலகம் வெளியிட்ட அறிக்கையின் படி, சண்டிலிப்பாயில் 68 பேர், உடுவிலில் 35 பேர், நல்லூரில் 33 பேர், பருத்தித்துறையில் 32 பேர், கோப்பாயில் 17 பேர், ஊர்காவற்றுறையில் 10 பேர், வேலணையில் 09 பேர், யாழ்ப்பாணத்தில் 2 பேர், தெல்லிப்பழையில் ஒருவர், மருதங்கேணியில் ஒருவர், யாழ் சிறைச்சாலையில் ஒருவர், யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒருவர், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒருவர் என 213 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று, யாழ். போதனா மருத்துவமனை அறிக்கையின் பிரகாரம், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 42 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 9 பேர், போதனா மருத்துவமனையில் 8 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 5 பேர், புங்குடுதீவு ஆதார மருத்துவமனையில் ஒருவர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 6 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 3 பேர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் ஒருவர் என 75 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இது தவிர, யாழ். போதனா மருத்துமனை அறிக்கையின் பிரகாரம் முல்லைத்தீவு மணலாறு (வெலிஓயா) மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேர், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் இருவர், பொது மருத்துவமனையில் இருவர், மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவர் என 14 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் பொது மருத்துவமனையில் இருவர், வவுனியா மாவட்டத்தில் பொது மருத்துவமனையில் இருவர், வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் இருவர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu




# ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதற்கு ஐ.தே.க. தயார்



## கட்சியின் 75ஆம் ஆண்டு நிறைவு விழாவில் ரணில் எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, செப். 07

**இலங்கையை ஒரு சிறந்த நாடாக மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்படத் தயார் என்று அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பழைய ஐக்கிய தேசியக் கட்சி இப்போது இல்லை என்றும், இன்று புதியதோர் ஐக்கிய தேசியக் கட்சி காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியை மீளக்கட்டியெழுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், இளைஞர்கள் இணைந்துகொள்ள வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். (இ)

# எனக்கு அரசியல் கற்று கொடுத்த ஐ.தே.க.வுக்கு பிறந்தநாள் வாழ்த்து

## ஹறின் பெர்னாண்டோ எம்.பி. 'ருவிட்'

கொழும்பு, செப். 07

ஐக்கிய தேசியக் கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹறின் பெர்னாண்டோ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

"எனக்கு அரசியல் கற்றுக் கொடுத்த ஐ.தே.கவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்று தமது ருவிட்டர் பதிவில் ஹறின் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய தலைவர்களின் கூற்றுக்களை நினைவுகூர்ந்துள்ள அவர், ஐ.தே.க. தமது 75ஆவது ஆண்டில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அடுத்த கட்டத்தை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது குறித்து ஐ.தே.க. முடிவு செய்ய வேண்டும் என்றும் ஹறின் குறிப்பிட்டுள்ளார். 1946ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6ஆம் திகதியன்று அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் அதிக காலம் நாட்டை ஆட்சி செய்த முக்கிய அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 75 ஆவது ஆண்டு நிறைவை நேற்றுக் கொண்டாடியது. (இ)

# பாரிஸுக்கு நேரடி விமான சேவையை மீள ஆரம்பிக்க ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திட்டம்

கொழும்பு, செப். 07

பிரான்ஸ் தலைநகர் பாரிஸுக்கான நேரடி விமான சேவைகளை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

முதலாவது விமானம் சேவை எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து பிரான்ஸ் பாரிஸ் சார்லஸ் டி கோல் விமான நிலையத்துக்குப் பயணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக எயார் பஸ் ஏ 330 - 300 வகை விமானத்தை ஈடுபடுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த விமானங்கள் வாரத்தில் புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று நாட்களில் அதிகாலை 12.35 மணிக்கு கட்டுநாயக்கவிலிருந்து புறப்படவுள்ளன.

இரு விமான நிலையங்களுக்கும் இடையேயான பயண நேரம் சுமார் 11 மணிநேரம் 25 நிமிடங்கள் என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2016 ஆண்டு நவம்பர் மாதம் பாரிஸுக்கான தமது விமான சேவைகளை இடைநிறுத்தியது.

எனினும், கொரோனாத் தொற்று நோய்களின்போது 2020ஆம் ஆண்டில் ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் தற்காலிகமாகப் பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களை இயக்கியிருந்தது. (இ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 - 10 - 1944 | 05 - 09 - 2021 |



## தம்பையா தில்லையம்பலம்

முல்லைத்தீவு மாமடு பழம்பாசியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பையா தில்லையம்பலம் அவர்கள் கடந்த (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா – பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் அன்புக் கணவரும், தவராஜா, கமலாம்பிகை, பிறேமாவதி, தயாபரன் (பிரான்ஸ்), ரமணன் (பிரான்ஸ்), தக்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும்,நந்தா, ஜெகதீஸ்வரன், ரதிக்குமார், ரஜனி, டென்சிஜா, திசாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,காலஞ்சென்ற கமலாதேவி, தியாகராஜா, மல்லிகாதேவி, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிருதிகேசன், பிரணவி, அபெசியா, துர்சிகன், பானுஜா, டினுஜா, தமிசா, ஜஸ்வின், நிருஸ், பதுமிலன், தருஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
ரமணன் – மகன்
Mobile : +33625499343

தகவல்
**குடும்பத்தினர்.**

# கோமாளிகள் போல் ஆட்சியாளர்கள்

## சாடுகின்றார் சமிர பெரேரா

கொழும்பு, செப். 07

"கோமாளிகள் நாட்டை ஆட்சி செய்வதைப் போன்றே தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர்."

- இவ்வாறு சாடினார் ஐக்கிய மக்கள் சங்கத்தின் ஒருங்கமைப்பாளர் சமிர பெரேரா.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உடல்நலக் குறைவு காரணமாக மரணமடைந்த பிரபல பாடகர், மக்கள் கலைஞரான சுனில் பெரேராவின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஜனநாயக நாட்டின் தூணாகவே அவரது எமது நினைவில் உள்ளார்.

மக்களின் பயத்தைப் போக்கும் வகையில் அவர் தனது ஜனநாயகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஐக்கிய மக்கள் சங்கம் சாரபாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோமாளிகள் நாட்டை ஆட்சி செய்வதைப் போன்றே தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர். கோமாளிகள் அரசர்களாகியுள்ளனரா என்ற கேள்வி எழுகின்றது.

கோமாளிகள் செய்யும் வேலையை அரசில் இருப்பவர்கள் செய்கின்றனர். கோமாளி சீனியை உண்பது போல் அரசும் சீனியை உருண்டு புரண்டு உண்கின்றது.

ஆனால், நாட்டு மக்கள் ஒரு கிலோகிராம் சீனியைப் பெற்றுக்கொள்வதற்காக ச.தொ.ச. விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். வெயிலில் காய்கின்றனர். மழையில் நனைகின்றனர். இறுதியில் கொரோனா வைரஸ் பரவலுடன் சீனியைப் பெற்று வருகின்றனர்.

தற்போது நாட்டில் இந்த நிலைமையே உருவாகியுள்ளது. இந்த அரசு சீனி நாடகம், பாணி நாடகம், முட்டி நாடகம் என்பவற்றை அரங்கேற்றி வருகின்றது" - என்றார்.

# பொருளாதார மத்திய நிலையங்களை இரு நாட்களுக்கு திறக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 07

இலங்கையிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் கொழும்பு மெனிங் சந்தை ஆகியன எதிர்வரும் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த தினங்களில் மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காரணமாக அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களும் மூடப்பட்டன.

எனினும், கடந்த இரண்டு வாரங்களாக மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக மாத்திரம் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை இரண்டு நாட்கள் மாத் திரம் திறக்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துரங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு